பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 01 செவ்வாய்கிழமை 17.12.2019 கதிர் 42

இது ரகசியம் அல்ல!

சிரேஸ்ட சட்டத்தரணி ஒருவர் நேற்றிரவு பேசிக்கொண்டிருந்தார். தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் உரிய முறையில் கையாளப்படவில்லை என்ற விசனம் அவருக்கு.

"இன்றும்(நேற்றும்) கூட நீங்கள் பத்திரிகை பக்கம் 02

# சரிவராது சமஷ்டி!

## உண்மையைச் சொன்னார் கோட்டா



கொழும்பு, டிசெ.17

சமஷ்டி, அதிகாரப்பகிர்வு என்பன நடைமுறைச் சாத்தியமற்ற விடயங்கள். இவற்றைக் காட்டிலும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே மக்களுக்குத் தேவையானதாகும்.

இவ்வாறு நேற்று வெளிப்படையாகத் தெரிவித்தார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பில் தான் கொண்டுள்ள நிலைப்பாட்டை அவர் நேற்று இப்படி வெளிப்படுத்தினார். பக்கம் 03

## வடக்கு அரசியல் குழுக்கள் மீது ஜனாதிபதி கோட்டா பாய்ச்சல்!

### காணாமற்போனோர் பிரச்சினையை அவை அரசியலாக்கி விட்டனவாம்

கொழும்பு, டிசெ.17

காணாமற்போனோர் பிரச்சினை அரசியல் மயமாக்கப்பட்டமையால் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரி பக்கம் 03

## மணல் கொள்ளையை உடன் கட்டுப்படுத்து!

### யாழ்ப்பாணத்தில் நாளை போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 17

வடக்கில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிராக யாழ்.மத்திய பஸ் நிலையத்துக்குமுன்பாக நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாபெரும் கண்டனப் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

புதிதாகப் பதவியேற்றுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மணல் வழித்தட அனுமதியை இரத்துச் பக்கம் 03

## சுவிஸ் தூதரகப் பணியாளரால் பாதிக்கப்பட்டவன் நானேதான்!

### ஜனாதிபதி கோட்டாபய விசனம்

கொழும்பு, டிசெ.17

சுவிஸ் தூதரகத்தில் பணியாற்றும் உள்ளூர்ப் பணியாளர் கடத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்டார் எனத் தெரிவிக்கப் பட்ட குற்றச்சாட்டில் பாதிக்கப்பட்டவர் நான்தான் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

பத்திரி பக்கம் 03

## இலங்கைக்குத் தீங்கு செய்ய ஒருபோதும் எண்ணவில்லை

### கோட்டாவிடம் கூறினார் சுவிஸ் தூதர்



கொழும்பு, டிசெ.17

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதர் ஹான்ஸ்பீட்டர் மோக் ஆகியோருக்கிடையிலான முக்கிய சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

இதன்போது, பக்கம் 02

## மணல் கொள்ளையிட்ட நால்வருக்குத் தண்டம்!

### தலா ரூ.1 லட்சம் அறவிட்ட யாழ். நீதிவான் நீதிமன்றம்!

யாழ்ப்பாணம், டிசெ. 17

அரியாலை, பூம்புகார்பகுதியில்சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட நால்வருக்கு தலா ஒரு லட்சம் ரூபா தண்டப் பணம் விதித்து யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் உத்தரவிட்டார்.

உரிய பக்கம் 03

## சுவிஸ் தூதரகப் பணியாளர் நேற்று அதிரடியாகக் கைது!

### டிசெம்பர் 30 வரை விளக்கமறியலில்



கொழும்பு, டிசெ.17

கடத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்டார் எனக் கூறப்பட்ட சுவிஸ் தூதரகத்தின் பணி பக்கம் 03

## கூட்டமைப்பிலிருந்து வெளியேறியோரை சம்பந்தனே மீண்டும் அழைக்கவேண்டும்!

### புளொட் தலைவர் சித்தார்த்தன் கருத்து

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 17

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் இருந்து பலரும் வெளியேறிச் சென்றிருக்கின்றனர். தமிழ் மக்களின் ஒற்றுமை கருதி அவர்களைக் கூட்டமைப்பில் வந்துஇணையுமாறுகூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனே அழைக்கவேண்டும். அதற்கான முயற்சிகளையெடுக்கவேண்டியது அவசியம். பக்கம் 02

## ஹெரோய்னுடன் இருவர் வவுனியாவில் சிக்கினர்!

வவுனியா, டிசெ. 17

வவுனியாவில்நேற்று இடம்பெற்ற நடவடிக்கையின்போது இருவர் ஹெரோய்னுடன்கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா போதை ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

நேற்றுப் பிற்பகல் வவுனியா நகர் பகுதியில் இருந்து தாண்டிக் குளம் பகுதி நோக்கிச் சென்ற பக்கம் 03

## மணல் கடத்துவோருக்கு எதிராக கூட்டமைப்பு சட்ட நடவடிக்கை!

### மண்கும்பானுக்கு நேற்றுப் பயணம் செய்த சுமந்திரன், சிறிதரன் நிலைமையை ஆராய்வு





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ.17

சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறும் தீவகத்தின் மண்கும்பான் பக்கம் 03

## தமிழ் மக்களை எதிரிகளாகப் பார்ப்பாரா? இன்றேல் அரவணைப்பாரா கோட்டாபய?

### கேள்வி எழுப்புகின்றார் சித்தார்த்தன் எம்.பி.



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 17

ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு வாக்களிக்கவில்லை என்பதால் சிறுபான்மை மக்களை எதிரிகளாகப் பார்க்கப் போகின்றாரா அல்லது அரவணைத்துக் கொண்டு செல்லப் போகின்றாரா பக்கம் 02

## மதக் கலவரத்தை தூண்டுகிறார் விக்கி

### சீற்றமடைகின்றார் எஸ்.பி

கொழும்பு, டிசெ.17

இலங்கை பௌத்த நாடு அல்ல என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தற்போது கூறியுள்ளமை அவசியமற்ற கருத்தாகும். பௌத்த சமயத்தவர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையில் பக்கம் 03

## பதியப்படாத வாகனத்தைச் செலுத்திச் சென்றே வவுனியாவில் சிறிரங்கா விபத்துக்குள்ளாகினார்

### குற்றபத்திரிகையில் தனியான குற்றச்சாட்டு

வவுனியா, டிசெ. 17

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயரட்ணம் சிறிரங்கா செலுத்திச் சென்ற விபத்தை ஏற்படுத்திய வாகனம் பதிவு செய்யப்படாதது என்று வவுனியா மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிகையில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதி வவுனியா பக்கம் 03

# விபத்தில் காயமடைந்த முன்னாள் போராளி சாவு

கிளிநொச்சி, டிசெ. 17

கிளிநொச்சியில் கடந்த மாதம் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த நிலையில், கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த முன்னாள் போராளி நேற்று முன் தினம் உயிரிழந்தார்.

புதியகொலனிமாங்குளத்தைச் சேர்ந்த விஸ்வலிங்கம் – பிரபா என்னும்37வயதுடையகுடும்பஸ்தரே உயிரிழந்தவர் ஆவார்.

உயிரிழந்த நபர் கிளிநொச்சியில் இருந்து மாங்குளத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோதே மோட்டார் சைக்கிள் வேக கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத்துடன் மோதி படுகாயமடைந்தார். இவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசா லையில் 20 நாட்களாகச் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தார். (ஐ

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*ஆசிரியர்கள், ஊடகப் பிரதிநிதிகள் ஜனாதிபதி கோட்டாபயவைச் சந்தித்தீர்கள். ஒருவர கூட தமிழ் அரசியல் கைதிகள் விடயம் குறித்து அவரிடம் கேள்வி எழுப்பவில்லையாமே...! கோட்டாபய ராஜபக்ஷ தனது தேர்தல் விஞ்ஞானபனத்திலேயே அவர்களின் விடுதலை குறித்துப் பிரஸ்தாபித்திருந்தார். அது குறித்து கேட்டுத் தெளிவுபடுத்துவதில் உங்களுக்கு என்ன பிரச்சினை?"* – என்று என்னை ஒரு பிடிபிடித்தார் எனக்கு மிக அந்நியோன்னிய மானவரான அந்தச் சட்டத்தரணி.

அவர் கேள்வியில் நியாயம் இருந்தது. ஜனாதிபதி கோட்டபயவின் ஊடக அறிக்கைகள், செய்திகளை நேரம் தவறாமல் எங்களுக்கு அனுப்பும் அவரது ஊடகப் பிரிவுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் 'காலைக்கதிர்' நாளிதழ் ஓர் ஊடகமாகப்படவில்லை போலும் என்ற தகவலை அவருக்குச் சொன்னேன்.

எங்கள் வாய் கொஞ்சம் நீளம் என்று நினைத்துவிட்டார்கள் போலும். அழைப்பு ஏதும் வரவில்லை. நாங்கள் யாரும் பங்குபற்ற வில்லை. அதனால நீங்கள் கேட்கும் விடயம் குறித்து கேள்வி எழுப்பும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைக்கவில்லை. மன்னித்துக் கொள்ளுங்கள் – என்று கூறிச் சமாளித்தேன்.

மஹிந்த காலம் வேறு. என்ன முரண்பாடு இருந்தாலும் இத்தகைய சந்திப்புகளுக்கு என்னை அழைத்து அங்கு கருத்தியல் ரீதியாக முட்டுப்படுவதில் அவருக்கு ஒன்றும் ஆட்சேபனை இருப்பதில்லை. இப்போது காலம் வேறு. கோட்டா காலம் எங்களைப் போன்ற ஊடகங்களுக்கு கெட்ட காலமோ யாமறியோம்.

என் சட்டத்தரணி நண்பர் இன்னொரு விடயத்தையும் சுட்டிக்காட்டினார்.

தமிழ் அரசியல் கைதிளை விடுவிப்போம் என்ற முடிவைத் தமது தேர்தல் விஞ்ஞானபனத்தில் திட்டவட்டமாக அறிவித்தவர் கோட்டாபய ராஜபக்ஷ மத்திரமே. நீங்கள்– தமிழர்கள் – எல்லோருமே –ஒன்று சேர்ந்து வாக்களித்த சஜித் பிரேமதாஸ, பூசி மெழுகித்தான் அது பற்றிக் குறிப்பிட்டிருந்தார். நீண்டகாலம் வழக்குத் தொடுக்கப்படாமல் இருக்கும் கைதிகளை விடுவிப்போம் என்றுதான் அவர் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருந்தார்.

உண்மையில் வழக்குத் தொடுக்கப்படாமல் எந்த அரசியல் கைதியும் இப்போது தடுத்து வைக்கப்படவில்லை. ஆகவே, சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்ட இந்த விடயம் சுத்துமாத்து. ஆனால் அவர் அரசியல் கைதிகளை விடுவிப்பார் என்ற நம்பிக்கையையும் ஊட்டி அதனடிப்படையில் அவருக்கு வாக்களிக்குமாறு தமிழ்த் தலைவர்கள் கோரினார்கள். நல்ல காலம் அவர் தோற்றுவிட்டார். தேர்தலில் வென்ற கோட்டாபய இந்த அரசியல் கைதிகளை விடுவிப்பேன் என்று முன்னர் கூறியவர். ஆனால் நீங்களோ அது பற்றி அவரிடம் கேட்டு ஒரு பதிலைப்பெறுபவர்களாக இல்லை – என்று நீட்டி முழங்கிக் குறைபட்டுக்கொண்டார் அவர்.

நான்பெயருக்குத்தலையாட்டி வைத்தேன். ஆனால் சில தினங்களுக்கு முன்னர் சில மதகுருமார் புதிய ஜனாதிபதியைச் சந்தித்தபோது இதுகுறித்து அவரிடம் கேள்வி எழுப்பியிருக்கின்றனர். நீதிமன்றத்தின் ஊடாக இக்கைதிகள் விடுதலைக்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு தாம் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியிருக்கின்றார் என்று ஜனாதிபதி பதிலளித்தார் என அறியவந்தது.

தாம் நினைத்தால் உடனே அரசியல்கைதிகளைவிடுப்பதுதானே, அதற்குஏன்நீதிமன்றநடைமுறைகள் என்று ஜனாதிபதி குறித்து நீங்கள் சீறுகின்றமை விளங்குகின்றது.

ஆனால் ஜனாதிபதி அந்த வழிமுறையில்தான் நடவடிக்கை எடுக்கமுடியும் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இப்போது சிறையில இருக்கும் அரசியல் கைதிகள் 95 பேர். அவர்களில் 94 பேர் நீதிமன்றங்களின் கீழ் – நீதித்துறைக் காவலில் – உள்ளனர். ஒரே ஒருவர் மட்டும் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் உள்ளார். அவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினத்தின் மகன் ஆதித்யன். அவரின் விடயத்தைத் தனித்துப் பார்க்கலாம்.

எஞ்சியுள்ள 94 கைதிகளில் ஐம்பதுக்கும் அதிகமானோர்களுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றத் தீர்ப்புத் தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு வழங்கப்படவேண்டும். அதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை நீதியமைச்சு முன்னெடுக்க வேண்டும். ஜனாதிபதியிடமிருந்து ஓர் அரசியல்தீர்மானம்வந்தால்தான் நீதி அமைச்சு அத்தகைய நடவடிக்கையை ஆரம்பிக்கும். ஆனால் அத்தகைய தீர்மானம் எதனையும் ஜனாதிபதி இதுவரை எடுத்தார் எனத் தெரியவில்லை.

ஏனையோருக்கும், தண்டனைத் தீர்ப்பு பெற்ற ஒரு சிலருக்கும் எதிராக வேறு வழக்குகள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்த வழக்குகளை முடிவுறுத்தி அவர்களை விடுவிப்பது அல்லது புனர்வாழ்வு போன்ற நடவடிக்கை ஊடாக விடுவிப்பது முதலிய ஒரு தீர்மானத்தை அரசுத் தலைமை எடுக்கலாம். அதற்கும் அதிகார பீடத்தின் அரசியல் தீர்மானம் அவசியம். அத்தகைய அரசியல் தீர்மானத்தை எடுத்து அதன்படி செயற்படுத்துவதற்கு சட்டமா அதிபர் வழிப்படுத்தப்படவேண்டும்.

இவை எவையும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமான அளவுக்கு இதுவரை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

தேர்தல் சமயத்தில் இந்தக் கைதிகள் குறித்து அதிகம் பேசிய நாமல் ராஜபக்ஷ, அங்கஜன் போன்ற எம்.பிக்களிடமாவது யாராவது இப்போது நிலைமை என்ன என்று கேட்டுச் சொன்னால் நல்லது.

இனி, தடுப்புக் காவலில் வாடும் கனகரத்தினம் ஆதித்யன் விடயத்துக்கு வருகிறேன். அவர்தான் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழான தடுப்புக் காவல் உத்தரவுப் பத்திரத்தின் கீழ் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒரே அரசியல் கைதி.

இவருக்கு எதிராக மூன்று வழக்குகள். முதல் வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி இளஞ்செழியனுக்கு முன்னால் வந்தது. தடுப்புக்காவலில் இருந்த சமயம் அதிகாரிகளுக்கு ஆதித்யன் வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அவருக்கு எதிரான சாட்சியமாக ஏற்கமுடியாது என்று யாழ். மேல் நீதிமன்றம் முடிவுசெய்து தீர்ப்பளித்து அந்த வழக்கில் அவரை விடுதலை செய்தது.

ஆனால் அவர் விடயத்தில் இலங்கையின் நீதித்துறையில் ஒரு விபரீதம் நிகழ்ந்தது. எந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்கமுடியாது என்று யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றம் நிராகரித்துத் தீர்ப்பளித்ததோ அந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்புடையதாக அறிவித்தது கொழும்பு மேல் நீதிமன்றம். ஆனால் அந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்துடன் ஒத்துப்போகக் கூடிய மேலதிக சாட்சியங்கள் எதனையும் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் அரசுத் தரப்பினால் சமர்ப்பிக்க முடியாமல் போனமையால் வேறு வழியின்றி அவரை இரண்டாவது வழக்கிலிருந்தும் கொழும்பு மேல்நீதிமன்றம் விடுதலை செய்யவேண்டியதாயிற்று.

மூன்றாவது வழக்கிலும் அவரது அதே குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மற்றொரு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி நிராகரித்துவிட்டார். ஆக, இந்த வழக்கி லும் அவருக்கு எதிராக வேறு சாட்சியங்கள், ஆதாரங்கள் இருந்தால் சமர்ப்பிக்கும்படி நீதிமன்றம் கோரியுள்ளது. பெரும்பாலும். அந்த வழக்கில் அவர் விடுதலை செய்யப்படலாம். அப்படி விடுதலைத் தீர்ப்புக் கிடைத்தால் அதன் பின்னராவது அவருக்கு எதிரான தடுப்புக்காவல் உத்தரவுப் பத்திரம் ரத்தாகுமோ என்னவோ...! ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்....!

– மின்னல்–

## இலங்கைக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடத்தப்பட்டார் எனக் கூறப் படும் சுவிஸ் தூதரக பெண் பணியாளர் குறித்தும் கருத்துப்பரிமாறப்பட்டது.

'இலங்கைக்கு எந்தத் தீங்கும் செய்ய விரும்பவில்லை' என்று இதன்போது சுவிற்சர்லாந்து தூதர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடந்தது.

இரு நாடுகளின் நலனுக்காக நாங்கள் ஒன்றிணைந்து செயல்பட விரும்புகின்றோம். பதற்றமான இந்தச் சூழ்நிலையை நாங்கள் கடக்கவேண்டும். தவறான புரிதலை அகற்றவேண்டும் என்று சுவிஸ் தூதர் கூறினார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி கோட்டாபய, இதுவரை நடந்த சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றத்தை தூதுவருக்கு விளக்கினார்.

கடத்தல் என்று கூறப்படுவது மொத்த இட்டுக்கட்டல் என்பது இப்போது நன்கு நிறுவப்பட்டுள்ளது. ஊபர் அறிக்கைகள், தொலைபேசி உரையாடல்கள் மற்றும் சி.சி.ரி.வி. காட்சிகள் போன்ற மறுக்க முடியாத சான்றுகள் இந்த உண்மையை சுட்டிக்காட்டுகின்றன. என்னையும் எனது அரசையும் இழிவுபடுத்துவதற்குத் தூதரக அதிகாரி சில ஆர்வமுள்ள தரப்பினரால் கட்டாயப்படுத்தப்பட்டிருக்கவேண்டும். தொடர்புபட்டவர்கள் ஏன் இப்படிநடந்துகொண்டனர்என்பது தெளிவாகத் தெரியவில்லை என்று ஜனாதிபதி கூறினார்.

இந்தச் சம்பவம் முதன்முதலில் தெரிவிக்கப்பட்டபோது சுவிஸ் தூதரகத்தின் ஆரம்ப எதிர்வினையில் எந்தத் தவறும் இல்லை என்று ஜனாதிபதி கோட்டா கூறினார். இது நியாயமானதே. அதன் பணியாளர்களில் ஒருவர் சிக்கலில் இருந்தால், தூதரகம் தலையிட வேண்டும் என்றார்.

உண்மை வெளிவரும் வகையில் விசாரணையை அதன் முடிவு வரை நடத்த அரசுடன் ஒத்துழைக்குமாறு சுவிஸ் தூதரை ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

அண்மையில் நடந்த தேர்தல் வெற்றிக்கு ஜனாதிபதிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த சுவிஸ் தூதர், அவர் அனைத்து இலங்கையர்களின் ஜனாதிபதியும் என்ற கோட்டாபயவின் கருத்தை மிகவும் பாராட்டுவதாகக் கூறினார்.

இலங்கையுடனான பாரம்பரிய உறவுகள் வலுவாகவும் பரஸ்பர நன்மைக்காகவும் இருப்பதில் சுவிற்சர்லாந்து மகிழ்ச்சியடைகிறது என்று தூதுவர் கூறினார். தூதரகத்தின் முதல் செயலாளர் சிடோனியா கப்ரியலும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டார். (ஐ)

## கூட்டமைப்பிலிருந்து..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன்.

கூட்டமைப்பின் தவறுகள் திருத்தப்பட்டுவெளியேறியவர்கள் நம்பக்கூடிய நிலைமைகள் ஏற்படுத்தப்படுவதுடன் ஒற்றுமைக்காக இதய சுத்தியுடன் செயற்படவேண்டியது அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்க் கட்சிகளுக்குள் ஏற்பட்டுள்ள பிரிவையடுத்து வலியுறுத்தப்படும் ஒற்றுமை குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழர் தரப்பிலுள்ள ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளை கூட்டமைப்புடன் வந்தசேரும்படி நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்தான் அழைப்பு விடுத்திருந்தார். ஆனால் கூட்டமைப்பு இதயசுத்தியோடுசெயற்படவேண்டும். கடந்த காலங்களில் நடந்த தவறுகள் மீண்டும் நடக்காமல் நம்பக்கூடிய விதமாக நாங்கள் நடந்துகொண்டு அழைத்தால் தான் அவர்கள் வருவார்கள். அதைவிடுத்து வெறுமனே ஒற்றுமைக்கு வாருங்கள் என்று சொன்னால்வரமாட்டார்கள்தானே.

ஆகவே இந்த விடயத்தில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சரியான கவனத்தைச் செலுத்தி அனைவரையும் அழைக்க முயற்சிக்கவேண்டும். இது சம்பந்தமாக சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கூட்டமைப்பின் பங்காளிகள் கூட்டத்திலும் கூட கதைக்கப்பட்டுள்ளது. ஆகையால் அனைவரையும் ஓரணியில் இணைப்பது சம்பந்தமான முயற்சிகளைக் கட்டாயம் எடுக்க வேண்டும். – என்றார். (ஐ–07)

## தமிழ் மக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டாபய என்பதே கேள்வியாக இருக்கின்றதெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் இப்போது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கோட்டாபயதான் தேர்தலில் வெற்றி பெறுவார் என்பது தென்னிலங்கையைப்பொறுத்த மட்டில் மிகத் தெளிவாகத் தெரிந்தது. ஆனால் அவருக்கு எதிராக மிகப் பெருவாரியாகத் தமிழ் மக்கள் வாக்களித்திருந்தாலும் கூட அவர்தான் வெல்வார் என்பதை ஆரம்பத்திலேயே தென்னிலங்கை நிலைமைகளை வைத்து ஊகித்திருந்தேன். ஆகையால் அவர் வெற்றி பெற்றமை ஒன்றும் எனக்குப் பெரிய ஏமாற்றமாகவோ அதிர்ச்சியாகவோ இருக்கவில்லை.

குறிப்பாகச் சிங்கள வாக்குகளால்தான் வெற்றி பெறுவார் என கோட்டாபய கருதியிருந்தார். ஆனாலும் தமிழ் மக்களும் தனக்கு வாக்களிக்கவேண்டுமென்று என்னைச் சந்தித்தபோது கோரியிருந்தார். ஆனாலும் தமிழ் மக்கள் அவருக்கு வாக்களிக்காமலேயே தனியே சிங்கள வாக்குகளால்வெற்றி பெற்றிருக்கிறார் அவர். ஆகவே தமிழ் மக்கள் வாக்களிக்காதமையை ஆதங்கமாகப் பார்க்கப் போகிறரா அல்லது ஆத்திரமாகப் பார்க்கப் போகிறாரா என்று பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

தேர்தலுக்குப் பின்னர் அவர் சிறுபான்மை மக்கள் தனக்கு வாக்களிக்கவில்லை என்றும், பெரும்பான்மை மக்களின் வாக்குகளினால்தான் வென்றேன் என்றும் சொன்ன விடயமும் தமிழ் மக்களை எப்படி பார்க்கப் போகின்றார் என்ற அச்சத்தை ஏற்படுத்தியிருந்தது. ஏனென்றால் தொடர்ந்தும் பெரும்பான்மை மக்களின் விருப்பங்களைத்தான் அவர் நிறைவேற்றுவாரா என்ற சந்தேகமும் இருந்தது.

முக்கியமாக அரசியல் தீர்வு விடயத்தில் பெரும்பான்மை மக்கள் விரும்பாத எதையும் செய்யமாட்டேன் என்று கூறுகின்றமை நிச்சயமாக இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வு வர முடியாது என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

ஆகவே இந்தக் கால கட்டத்தில் ஒரு நியாயமான அரசியல் தீர்வு ஒன்று வருமென்று நாங்கள் எதிர்பார்க்க முடியாது. ஓர் அமைதியான காலம் இருந்தாலே போதுமென்ற நிலைப்பாடுதான் இன்று தமிழ் மக்கள் மத்தியில் இருக்கிறது.

ஆனால் என்னைப் பொறுத்த மட்டில் யுத்த காலத்தில் நடந்தது போல நிகழ்வுகள் இனி நடக்க முடியாது. நடக்காது என்று தான் நான் நினைக்கின்றேன். நான் அவருடன் பலதடவைகள் கதைத்திருக்கின்றேன். அவர் இன்று இந்த நாட்டை மிகச் சிறந்த நாடாகப் பொருளாதாரத்தில் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பதிலேயே அக்கறை காட்டுகிறார் என நான் கருதுகிறேன்.

எப்படியாக இருப்பினும் அவர் வடக்கு–கிழக்கு விடயத்தில் எப்படியான விதத்தில் செயற்படப் போகின்றார் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்–என்றார். (ஐ–07)

## மணல் கடத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சி.சிறிதரன் ஆகியோர் நேரடிப்பயணம்செய்துநிலைமைகளைப் பார்வையிட்டமையுடன் மக்களையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தீவகம் உட்பட வடக்கில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிராகச் சட்ட ரீதியான நடவடிக்கையைத் தாம் எடுக்க உள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த மக்களிடம் தெரிவித்தனர்.

மணலுக்கான வழித்தட அனுமதி ஜனாதிபதியால் இரத்துச் செய்யப்பட்டிருக்கும் நிலையில் சட்டவிரோத மணல் அகழ்வு அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும், வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் அதிகரித்து வருகின்றன.

சட்டவிரோத மணல் அகழ்வால் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன எனவும், அதனை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டுமெனவும் பொதுமக்கள் பல தரப்பினரும் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்துவருகின்றனர்.

இந்த நிலையில் தொடர்ந்தும் சட்டவிரோத மணற்கொள்ளையில் ஈடுபட்ட விடயத்தை ஒட்டி யாழ்ப்பாணம் தீவகத்தில் உழவு இயந்திரங்களும் தீயிட்டு எரிக்கப்பட்டிருந்தன. அதேபோன்று வடமராட்சி கிழக்கிலும் மக்கள் கடும் எச்சரிக்கை விடுத்திருந்தனர். கிளிநொச்சியில் வீதியை மறித்து மக்கள் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர்.

இவ்வாறு சட்டவிரோத மணல் அகழ்வுக்குப் பலரும் எதிர்ப்பு தெரிவித்து தடுக்கவேண்டுமென வும் கோரி வருகின்றமையுடன் பல தரப்பினரிடமும் இது தொடர்பில் முறையிட்டும் உள்ளனர்.

இதற்கமைய தீவகத்தின் மணல் கும்பான் பகுதியில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் கூட்டமைப்பினருக்கு மக்கள் அறிவித்திருந்தனர்.

இதனையடுத்து கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறிதரன் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் பலரும் நேற்று அப்பகுதிக்கு நேரடிகள விஜயமொன்றை மேற்கொண்டனர்.

இதன்போது சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுகின்ற பிரதேசங்களைப் பார்வையிட்டமையுடன் அங்குள்ள மக்களையும் சந்தித்து இது தொடர்பில் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலின் போது சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிராகச் சட்ட ரீதியான நடவடிக்கைகளைத் தாம் எடுக்கவுள்ளனர் எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். (ஐ-07)

## மணல் கொள்ளை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிப்பத்திரம் பெறப்படாமல் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபடுவதால் சுற்றுச் சூழலுக்குப் பெருமளவில் பாதிப்பு ஏற்படுகிறது. அதனை அனுமதிக்க முடியாது என்று நீதிவான் ஏ.பீற்றர் போல் சுட்டிக்காட்டினார்.

அரியாலை, பூம்புகார் கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பைக்கோ வாகனத்தின் மூலம் மணல் அகழ்வில் ஈடுபட்ட 5 பேர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மணல் அகழ்வுக்கான சுரங்க அகழ்வுப் பணியகத்தின் அனுமதி இருக்கவில்லை. அதனால் அவர்கள் ஐந்து பேரும் விசாரணைகளின் பின்னர் நேற்றுத் திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

ஐந்து பேருக்கும் எதிராகத் தனித்தனியே குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. முதலாவது எதிரி தன் மீதான குற்றச்சாட்டை ஏற்க மறுத்து சுற்றவாளி என்று கூறினார். அதனால் அவரை இரண்டு வாரங்களுக்கு விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

ஏனைய நால்வரும் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டு குற்றவாளி எனக் கூறினர்.

அதனால் நால்வரும் தலா ஒரு லட்சம் ரூபா தண்டப்பணம் விதித்து விடுவிக்கப்பட்டனர்.

அத்துடன் கைது செய்யப்பட்ட நபர்களிமிருந்து மீட்கப்பட்ட ஒரு டிப்பர் வாகனம் 3 உழவு இயந்திரங்களையும் விடுவிக்க நீதிமன்று உத்தரவிட்டது.

(மறொரு செய்தி 14ஆம் பக்கத்தில்) (ஐ-07)

## சுவிஸ் தூதரகப் பணியாளரால்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைகளின் ஆசிரியர்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் பிரதானிகளை ஜனாதிபதி நேற்றுச் சந்தித்தார். ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

சுவிஸ் தூதரக உள்ளூர்ப் பணியாளர் கடத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்ட குற்றச்சாட்டில் பாதிக்கப்பட்டவராக நான்தான் மாறினேன். ஏனென்றால் நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவுடன் வெள்ளை வான் பற்றிய குற்றச்சாட்டுகள் வெளிவந்தன.

இந்தச் சம்பவம் சர்வதேச ஊடகங்களில் முன்னிலைப் படுத்தப்பட்டது. அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பில் சஜித் பிரேமதாஸவால்கூட அறிக்கை விடப்பட்டது.

பெண் பணியாளர் குற்றஞ்சாட்டுவது போன்று கடத்தல் சம்பவம் இடம்பெறவில்லை என்பது தொழில்நுட்ப மற்றும் பிற சான்றுகள் நிரூபித்துள்ளன.

கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகம் தவறு செய்ய முடியாது. ஏனெனில் அதன் ஊழியர்களில் ஒருவர் குற்றச்சாட்டுக்களை கூறும்போது அவர்கள் அரசுடன் இந்த விடயத்தை எடுத்துக்கொள்வது வழக்கத்துக்கு மாறானது அல்ல. அதன்படி அவர்கள் பிரதமரிம் முறைப்பாடு செய்தனர். நாங்கள் உடனடியாக விசாரணைகளை ஆரம்பித்தோம்.

ஊழியர் ஒத்துழைக்காதமையால் விசாரணைகள் மெதுவாக இருந்தன. அந்தவேளையில் அந்தப் பணியாளரின் உடல் நிலை சரியாக இல்லையெனத் தெரிவித்தார்கள். ஆனால் விசாரணைகளை ஆரம்பித்திருந்தோம்-என்றார். (ஐ)

## சுவிஸ் தூதரக பணியாளர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாளர் கார்னியர் பனிஸ்டர் பிரான்சிஸ் குற்ற விசாரணைத் திணைக்கள அதிகாரிகளால் நேற்றுக் கைது செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் டிசெம்பர் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

நேற்றுக் காலை குற்ற விசாரணைத் திணைக்களத்தில் முன்னிலையாகிய சுவிஸ் தூதரகப் பணியாளர் கார்னியர் பனிஸ்டர் பிரான்சிஸ், விசாரணைக்குப் பின்னர் மனநலச் சோதனைக்காக அனுப்பப்பட்டார்.

அங்கொடை மருத்துவமனையில் நடத்தப்பட்ட மனநலச் சோதனைகளை அடுத்து அவர் மீண்டும் குற்ற விசாரணைப் பிரிவில் முன்னிலையானார்.

அதேவேளை, திரிபுபடுத்தப்பட்ட பொய்யான சாட்சியங்களை அளித்தார் என்ற குற்றச்சாட்டில் அவரைக் கைது செய்யுமாறு குற்ற விசாரணைத் திணைக்களத்துக்குச் சட்ட மா அதிபர் நேற்று மாலை அறிவுறுத்தினார்.

இதையடுத்து, குற்ற விசாரணைத் திணைக்கள அதிகாரிகளால், சுவிஸ் தூதரகப் பணியாளர் கார்னியர் பனிஸ்டர் பிரான்சிஸ் மாலை 4.30 மணிக்கு கைது செய்யப்பட்டார்.

அத்துடன் அவர் நேற்று மாலை 5 மணியளவில் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

சுவிஸ் தூதரகப் பணியாளர் கார்னியர் பனிஸ்டர் பிரான்சிஸ் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் அவரைப் பிணையில் விடுவிக்க விண்ணப்பம் செய்தனர். எனினும் அவரைப் பிணையில் விடுவிக்கக் குற்ற விசாரணை அதிகாரிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

இந்த நிலையில் சுவிஸ் தூதரகப் பணியாளர் கார்னியர் பனிஸ்டர் பிரான்சிஸை டிசெம்பர் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

## பதியப்படாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செட்டிக் குளத்தில் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் ஜே. சிறிரங்கா பயணித்த வாகனம் விபத்துக்குள்ளாகியது. அதில் நாடாளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்பு உத்தியோகத்தர் உயிரிழந்தார்.

அந்த விபத்தில் உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தரான சிறிரங்காவின் பாதுகாவலரே வாகனத்தைச் செலுத்திச் சென்றாரெனப் பொலிஸ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டு வவுனியா நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

எனினும் சிறிரங்காவே வாகனத்தைச் செலுத்திச் சென்றார் என்றும் அவரது சாரத்தியத்தின் தவறே விபத்து ஏற்பட்டு பொலிஸ் உத்தியோகத்தரின் உயிரிழப்புக்குக் காரணமாக அமைந்தது என்றும் பின்னர் இடம்பெற்ற விசாரணையில் தெரியவந்தது. உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர் சாரதியின் இடப்பக்க மாகவுள்ள ஆசனத்திலேயே இருந்து பயணித்துள்ளார் என்பதும் உறுதி செய்யப்பட்டது.

எனினும் அப்போதைய பொலிஸ் மா அதிபர் பாலசூரிய வின் தலையீட்டால் உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தரே வாகனத்தைச் செலுத்திச் சென்றார் எனப் போலியான பி அறிக்கை நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டதாகவும் கண்டறியப்பட்டது.

இது தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனைக்காக இந்த வழக்கு வவுனியா நீதிவான் நீதிமன்றில் கிடப்பில் போடப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சிறிரங்கா உள்ளிட்ட 6 பேருக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அதில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிரங்காவுக்கு எதிராக இரண்டு குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டன.

அதில் முதாவது எதிரி சிறிரங்கா வாகனம் செலுத்திச் சென்ற வாகனம் உரியவாறு பதிவு செய்யப்படவில்லை என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

விபத்து இடம்பெற்றபோது சிறிரங்கா நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்திருந்தார். அதனைப் பயன்படுத்தி அவர் தனது வாகனத்தைப் பதிவு செய்யாமல் உரிய ஆவணங்களின்றிச் செலுத்திச் சென்றுள்ளார்.

சிறிரங்கா மீது இருவேறு குற்றப்பத்திரிகைகள் வவுனியா மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (ஐ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

வடக்கில் உள்ள சில அரசியல் குழுக்கள் தமது அரசியல் அதிகாரத்தைத் க்கவைத்துக்கொள்வதற்காகக் காணாமற்போனார் பிரச்சினையை உபயோகித்து வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகப் பணிப்பாளர்கள் ஆகியோருடன் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்படும்போதே தேசிய ஒற்றுமை பேணப்படும். நாட்டின் பாதுகாப்பு முதலிடம் வகிப்பதோடு, அதற்கான சூழல் உறுதியாகக் கட்டியெழுப்பப்படும்.

முப்படைத் தளபதிகள், புலனாய்வுத்துறைப் பிரதானிகள் தொடர்பில் நான் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளேன். அரசின் கொள்கைகள் தொடர்பில் அவர்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளனர்-என்றார். (ஐ)

## மணல் கொள்ளையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ளமையைத் தொடர்ந்து யாழ்ப் பாணத்தின் தீவகம், அரியாலை, வடமராட்சி கிழக்கு உட்பட பல இடங்களிலும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் அதிகரித்துள்ளன.

அதே போன்று வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் பல்வேறு இடங்களில் இந்த சட்டவிரோத மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன எனப் பல தரப்பினர்களும் தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வருகிறமையுடன் இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்தியும் பல தரப்புக்களுக் இணைந்து போராட்டமொன்றை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளன.

நாளை யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்தில் கட்சி வேறுபாடுகளைக் கடந்து அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-07)

## ஹெரோய்னுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்ரக வாகனத்தை வழிமறித்துச் சோதனை மேற்கொண்டபோது அதிலிருந்து ஹெரோய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டது.

தாண்டிக்குளத்தைச் சேர்ந்த 36 மற்றும் 38 வயதுடைய இரு சந்தேக நபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து 560 மில்லிக்கிராம் மற்றும் 160 மில்லிக்கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாகவும், கைது செய்யப்பட்ட இருவரிடமும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் பொலிஸார் கூறினர். (ஐ)

## மதக் கலவரத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதக் கலவரத்தைத் தூண்டி விடும் நிலைப்பாட்டிலேயே இவ்வாறான கருத்துக்களை இவர் குறிப்பிடுகின்றார் எனக் காணி இராஜங்க அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசியல் ரீதியில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளவர்கள் தற்போது மதத்தை இலக்காகக் கொண்டு பௌத்த மற்றும் இந்து மக்கள் மத்தியில் மதக் கலவரங்களைத் தோற்றுவிக்க முயற்சிக்கின்றார்கள்.

இலங்கை பௌத்த நாடு என்பதை உலக மதத் தலைவர்கள் பலர் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். 74 சதவீதம் சிங்கள, பௌத்த மக்கள் வாழ்கின்றமையால் அரசமைப்பின் ஊடாகப் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. பிற மதங்களைப் பாதுகாத்து பௌத்த மதம் எழுச்சி பெறுகின்றது என்று சர்வமதத் தலைவர்கள் கௌரவித்துள்ளார்கள்.

உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் என்ற ரீதியில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் பொறுப்புடன் செயற்பட வேண்டும். தேரவாத பௌத்த மத அடிப்படை கொள்கை இலங்கையில் இருந்து தோற்றம் பெற்றது என்பதை அனைவரும் தெரிந்து கொள்வது அவசியம். இலங்கை பௌத்தமத நாடாகவே சர்வதேசத்தில் அடையாளப்படுத்தப்படுகின்றது-என்றார். (ஐ)

## சரிவாரது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகைகளின் ஆசிரியர்கள், இலத்திரனியல் ஊடகங்களின் பிரதானிகளை ஜனாதிபதி நேற்றுச் சந்தித்தார். ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்–

சமஷ்டி மற்றும் அதிகாரப் பகிர்வு என்று கூறிக் கூறி சுமார் 70 வருடம் தமிழ் மக்களை ஏமாற்றி வந்துள்ள அரசியல் வரலாறு உள்ளது. பெரும்பான்மை மக்கள் விரும்பாத ஒன்றைப் பெற்றுக்கொடுப்பது? அப்படி கொடுப்பதாகக் கூறி மக்களை ஏமாற்றக்கூடாது. அபிவிருத்தி மூலமே நிரந்தர ஐக்கியத்தை ஏற்படுத்த முடியும்.

இதுவரை ஆட்சிபுரிந்த அனைத்து அரசுகளும் அரசியல் இலாபம் கருதியே அதிகாரப் பகிர்வு தொடர்பில் கதைத்தனர். அனைத்துக் குமுகங்களும் கௌரவமாக வாழவேண்டுமாயின் அவர்களுக்கான தொழில், பிள்ளைகளுக்கான கல்வி மற்றும் சிறந்த சுகாதார வசதிகள் அவர்களுக்குக் கிடைக்கப்பெறவேண்டும்-என்றார். (ஐ)

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## மக்கள் ஆணை பெறாத ஆட்சி

ஐக்கிய தேசியக் கட்சியில் சிலருக்கு 'கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்யும்' சுடலை ஞானம் பிறந்திருக்கின்றது போலும்.

கடந்த சனியன்று காலியில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பலமண்டலய மாநாட்டில் வைத்து அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான வஜ்ஜிர அபேவர்த்தன, விஜேபால ஹெட்டியாராய்ச்சிஆகிய இருவரும் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் அதனைத்தான் வெளிப்படுத்தியிருக்கின்றன.

அரசியலில் அரிச்சுவடி படித்தவர்களுக்குத் தெரிந்த பாடம் கூட, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரமுகர்களுக்கு – குறிப்பாக எம்.பி.மாருக்கு – காலம் பிந்தித்தான் புரிய ஆரம்பித்திருப்பதுதான் ஆச்சரியமான விடயம்.

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன வெற்றியீட்டியது என்பதற்காக நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத ஒரு தரப்பிடம் நாடாளுமன்றப் பெரும்பான்மை உள்ள ஒரு தரப்பினர் அரசை ஒப்படைத்தமை தவறு.

நாடாளுமன்றப் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் தரப்பின் நாடாளுமன்றத் தலைவராக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க, தமது பிரதமர் பதவியை இராஜினாமா செய்தமை பிழையான விடயம்.

– இவ்வாறு அந்த இரண்டு எம்.பிக்களும் சுட்டிக் காட்டும் வகாரங்கள் முற்றிலும் சரியானவை.

பொதுஜன பெரமுன அரசு புதிதாகப் பொறுப்பேற்று மூன்று வாரங்களாகின்றன. ஆனால் அந்த அரசு இன்னும் நாடாளுமன்றத்தையே சரியாக எதிர்கொள்ளவில்லை. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத அரசு ஆட்சிப் பீடத்தில் இப்படித் தொடருவதற்கு அனுமதிக்க முடியும் என்றால் – அதை வெறுமனே பார்த்திருக்கலாம் என்றால் – கடந்த ஆண்டு ஒக்ரோபரில் நடந்த சதிப் புரட்சியின் பின்னர் 52 நாள்கள் சட்ட முறையற்ற விதத்தில் அதிகாரத்தில் தொடர்ந்த அரசையும் அதன் பின்னரும் தொடர விட்டிருக்கலாம்;அதிகாரத்தில் விட்டிருக்கலாம்.

அடுத்த ஆண்டு ஓகஸ்ட் வரை அதிகாரத்தில் தொடர்வதற்கான ஆணை ஒன்றையே 2015 ஓகஸ்டில் தற்போதைய நாடாளுமன்றுக்கு மக்கள் வழங்கினர். அந்த ஆணை செல்லுபடியற்றதாக்கப்படவில்லை.

2019 ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் பெரு வெற்றியீட்டினார் என்பதற்காக அந்த நாடாளுமன்றத்துக்கு மக்கள் அளித்த ஆணை வாபாஸ் பெறப்பட்டு விட்டது என்று அர்த்தமல்ல.

அத்தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றியீட்டிய பின்னரும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரும் அணி மாறிவிடவேயில்லை.

தமிழ்க் கூட்டமைப்பின் ஆதரவுடன் நாடாளுமன்றில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருந்த பெரும்பான்மை ஆதரவு இன்னும் தொடருவதாகவே தெரிகின்றது.

அதேசமயம், 2018 ஒக்ரோபர் அரசியல் சதிப் புரட்சியை முன்னெடுத்தபோது பொதுஜன பெரமுனவுக்கு இருந்த சிறுபான்மை ஆதரவு நிலைமைதான் இன்றும் நாடாளுமன்றத்தில் தொடர்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் மாற்று அணி வேட்பாளர் வெற்றி பெற்றார் என்றால் – அதனால், அரசைத் தொடருவதற்கு தமக்கு மக்கள் அளித்த ஆணையைத் தார்மீக ரீதியில் தாங்கள் இழந்து விட்டார்கள் என ஆளும் தரப்பினர் கருதினால் – நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிய ஆணையைக் கோரி இருக்க வேண்டுமே தவிர, மக்களின் ஆணையின் அடிப்படையில் பெரும்பான்மையைப் பெறாத சிறுபான்மைத் தரப்பிடம் ஆட்சியை ஒப்படைத்திருக்கக் கூடாது.

அப்படி ஒப்படைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டமை ஜனநாயக ரீதியில் முழுத் தவறானதுதான். ஐ.தே.கட்சியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் இப்போது கூறும் மேற்படி கருத்து முற்றிலும் சரியானதே.

சரி, இப்படி நாடாளுமன்ற ஆட்சிக்கு அதிகாரமளிக்கப்படாத தரப்பிடம் – முன்னர் அரசியல் சதிப்புரட்சி மூலம் குறுக்கு வழியில் அதிகாரத்தைக் கைப்பற்றிய அணியிடம் – மீண்டும் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைக்கும் தவறான நிலைமை ஏற்பட்டது எங்ஙனம்? அதற்கு யார் பொறுப்பு?

அவலை இடிப்பதாக நினைத்துக் கொண்டு உரலை இடித்த மங்கள சமரவீர எம்.பி. போன்ற ஐ.தே.கவின் மூத்த சில பிரகிருதிகளினால் ஏற்பட்ட விபரீதமே இது.

நாடாளுமன்றப் பலம் ஐ.தே.கட்சியிடம் இருக்கையில் – ஜனாதிபதித் தேர்தல் முடிவுற்று ஒரு மாதம் கடக்கும் இன்றைய நிலையிலும் அது ஐ.தே.கட்சி வசம் இருக்கையில் – அதன் தலைவரும், அப்போதைய பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவைப் பலவீனப்படுத்துகின்றோம் என்று எண்ணிக் கொண்டு அதிகப் பிரசங்கித்தனமாக அமைச்சர் பதவிகளை இராஜினமாச் செய்த மங்கள போன்ற சில குசும்புத்தன அரசியல்வாதிகளினால் நேர்ந்த அவலம் இது.

இப்படி முந்திக் கொண்டு இராஜினமாச் செய்து ரணில் விக்கிரமசிங்கவைப் பலவீனப்படுத்தி, இருக்கும் அரசை வீழ்த்தி, மறுதரப்பிடம் அதிகாரத்தைக் கைம்மாற வைத்தால், தாமும் அணி மாறி அந்தத் தரப்பிலும் சேர்ந்து அதிகாரத்தை அனுபவிக்கத் தொடர்ந்து வாய்ப்புக் கிடைக்கும் என்று நப்பாசையுடனான பகல் கனவை கண்டார்களோ என்னவோ...!

ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தீர்ப்பை – ஆணையை – சிரம்மேல் கொள்பவர்களாக அவர்கள் இருந்திருந்தால், அத்தேர்தல் முடிவு வந்ததும் அமைச்சுப் பதவியை அல்ல, மக்கள் அவர்களுக்கு முன்னர் வழங்கிய ஆணையின் மூலம் கிடைத்த எம்.பி. பதவியைத்தான் இராஜினாமாச் செய்திருக்க வேண்டும். அதைச் செய்யாமல் வேறு விதமான அரசியல் குசும்புத்தனம் பண்ணியமையால், மக்கள் ஆணை பெறாத ஒரு தரப்பு ஆட்சிஅதிகாரத்தில் தொடரும் அவலம் நேர்ந்துள்ளது.

# வடகடல் நிறுவனத்தின் செயற்பாடுகளை ஆராய்வதற்கு விசேட குழு நியமிக்க முடிவு



கொழும்பு, டிசெ. 17

பாரிய நட்டத்தை எதிர்கொண்டுள்ள வடகடல் (நோர்த்சீ) நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கு விசேடகுழு ஒன்றை அமைக்கவிருக்கிறார் என கற்றொழில் நீரகவள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வடகடல் நிறுவனத்தின் அதிகாரிகளுக்கும் கடற்றொழில் நீரகவள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று மாளிகாவத்தையில் அமைந்துள்ள அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது பாரிய நட்டத்தில் இயங்கிவருகின்ற வடகடல் நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பாகத் தனக்குக் கிடைக்கும் தகவல்கள் திருப்தியளிக்கும் வகையில் இல்லை எனத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடகடல் நிறுவனமும் ஊழியர்களின் நலன்களும் பாதுகாக்கப்படவேண்டும் என்பதே தனது நிலைப்பாடுஎனவும்சுட்டிக்காட்டினார்.

மேலும், அந்த நிறுவனம் பாரிய நட்டத்தில் இயங்குவதற்கும் உற்பத்தி செயற்பாடுகள் வீழ்ச்சியடைவதற்குமான காரணங்களை அறிந்துகொள்வதற்காக விசேட விசாரணைக் குழுவை நியமிக்க இருப்பதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை தற்போது வடகடல் நிறுவனத்திடம் இருக்கின்ற வளங்களைப் பயன்டுத்தி மேற்கொள்ளக்கூடிய அதிகபட்ச செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையை உடனடியாக சமர்ப்பிக்குமாறும் அமைச்சரால் அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிறிலங்கன் எயர்லைன்ஸ் நிறுவன தலைவரானார் அசோக் பத்திரகே



கொழும்பு, டிசெ. 17

சிறிலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனத்தின் புதிய தலைவராக சொப்ட்லொஜிக் குழுமத்தின் நிறுவனர் அசோக் பத்திரகே நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் முன்னணி நிறுவனமான ஆசிரி குழும மருத்துவமனைகளின் தலைவராகவும் நிர்வாக இயக்குநராகவும் அசோக் பத்திரகே உள்ளார்.

சொப்ட்லொஜிக் கப்பிட்டல் பி.எல்.சி, சொப்ட்லொஜிக் பினான்ஸ் பி.எல்.சி, சொப்ட்லொஜிக் லைப் இன்சூரன்ஸ் பி.எல்.சி ஆகியவற்றின் தலைவராகவும் அவர் உள்ளார். ஓய்வு, சில்லறை, ஓட்டோமொபைல் மற்றும் ஐ.சி.ரி. வணிகங்களில் செயல்படும் பிற குழு நிறுவனங்களின் தலைவராகவும் அசோக் பத்திரகே உள்ளார்.

அவர் தேசிய அபிவிருத்தி வங்கியின் துணைத் தலைவராகவும், என்.டி.பி கப்பிட்டல் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி.யின் தலைவராகவும் பணியாற்றுகிறார். (ஐ)

# வெள்ளை வான் சாரதிகள் பிரபல கொள்ளையர்கள்!

## விசாரணையில் கண்டறிந்ததாம் பொலிஸ்



கொழும்பு, டிசெ. 17

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவின் ஏற்பாட்டில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தம்மை வெள்ளை வானின் சாரதிகள் என அறிமுகப்படுத்திய இருவரும் சி.ஐ.டியினரால் கைதானதையடுத்து அவர்களிடம் நடத்தப்படும் விசாரணைகளின்போது பல முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளன எனக் கூறப்படுகின்றது.

இந்த இருவரும் குறிப்பிட்ட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொள்ள சுமார் 30 லட்சம் ரூபாவை வெகுமதியாகப் பெறப் பேரம் பேசப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன் கொழும்பு செட்டியார் தெருவில் மூன்றரைக் கோடி ரூபா ,ஜா – எலவில் 75 லட்சம் ரூபா ,கந்தானை மற்றும் கொட்டாஞ்சேனையில் தலா 10 லட்சம் ரூபா கொள்ளைச் சம்பவங்களுடன் இவர்கள் தொடர்புபட்டவர்களென்றும் ,இந்த இருவரில் ஒருவர் 'உண்டியல் அத்துல' என்ற மோசடிப் புள்ளி என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

அத்துடன் இவர்கள் பலரைக் கடத்திக் கொலை செய்துள்ளமையும் தெரியவந்துள்ளதால் நீதிமன்றில் இவர்களை ஆஜர்படுத்தி மேலதிக விசாரணைகளை நடத்த சி.ஐ.டியினர் தீர்மானித்துள்ளனர் எனக் கூறப்பட்டது. (ஐ)

நாளை

18.12.2019 – புதன்கிழமை

நட்சத்திரம்: பூரம் பி.இ 1.26 வரை
திதி : ஸப்தமி பி.இ 12.39 வரை

இராகுகாலம் : 12.23 – 1.53
சுப நேரம் : 4.53 – 6.23

# வெள்ளைவான் கடத்தல் குறித்து அரசு முழுமையான விசாரணை!

## பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 17

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தல் பிரசார காலத்தில் முன்னாள் சுகாதார அமைச்சரின் அடியாட்கள் சிலர் முன்வைத்த வெள்ளை வான் கடத்தல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தப்படும் என்று பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முன்னாள் சுகாதார அமைச்சர் நடத்திய ஊடக மாநாட்டு நாடகத்தின் சூத்திரதாரி யார் என்பது விசாரணைகளில் தெரியவரும். அத்துடன் அந்த நாடகத்தின் நடித்தவர்களுக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது? அந்த நாசகாரக் குண்டர்கள் யார்? என்பது விரைவில் பொது மக்களுக்கு தெரியவரும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகச் சேறுபூசும் பிரசாரம் தொடர்ந்தபோதிலும் தேர்தலின் பின்னர் அரசியல் பழிவாங்கல் செயற்பாடுகள் எதுவும் இடம்பெறவில்லை.

சுவிஸ் தூதரகத்தின் பெண் ஊழியர் கடத்தப்பட்ட சம்பவம் புதிய ஜனாதிபதி கோட்டாபயவுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் முயற்சியின் ஒரு அங்கம்.

மேற்படி சம்பவம் தொடர்பான அனைத்து விடயங்களும் வெளியாகியுள்ளன. அவற்றைப் பற்றி நாம் ராஜதந்திர சமூகத்துக்கு ஏற்கனவே தெரிவித்துவிட்டோம். புதிய அரசைக் கஷ்டத்தில் போடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சி இது. இந்தச் சம்பவம் தொடர்பாக அனைத்து விவரங்களும் இப்போது வெளிவந்துள்ளதால் அரசுக்கோ அல்லது ஜனாதிபதிக்கோ எவரும் அபகீர்த்தியை ஏற்படுத்த முடியாது – என்றார்.

# காச நோயால் உயிரிழப்போரின் எண்ணிக்கை நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 17

காசநோயினால், ஆண்டுதோறும் சுமார் 400இற்கும் அதிகமானோர் உயிரிழக்கின்றனர் எனக் காசநோய் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான காச நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

காசநோய் முழுமையாகக் குணமாகக்கூடிய நோய் எனவும், நோயைக் கண்டறிவதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் மாவட்ட வைத்தியசாலைகளில் காணப்படுவதாகவும் வைத்தியர் ஹேமந்த ஹேரத் கூறியுள்ளார்.

காய்ச்சல் மற்றும் இருமல் 15 நாட்களுக்கும் மேலாக நீடித்தால், அருகிலுள்ள வைத்தியரை நாடுமாறும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார். (ஐ)

# வீழ்ந்துள்ள பொருளாதாரம் கோட்டாபயவினால் நிமிரும்

## கூறுகின்றார் பந்துல குணவர்தன



கொழும்பு, டிசெ. 17

நாட்டில் வீழ்ச்சியடைந்து காணப்படும் பொருளாதாரம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் புத்துயிர் பெறுமென அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்

இலங்கைத்தபால்திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த 'தபால்பிரமான ஹரசரணி 2019 விருது' வழங்கும் விழா மாத்தறை ருஹுணு பல்கலைக் கழக ரவீந்திரநாத் தாகூர் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதன்போது அந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் இந்த அரசு புதிய பயணமொன்றை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது.

இந்த நாட்டுச் சரித்திரத்தை எடுத்துக் கொண்டால் சுதந்திரத்தின் பின் உருவான எந்தவொரு அரசும் திறந்த பொருளாதாரக் கொள்கையை கொண்டிருந்தாலும் மூடிய பொருளாதாரக் கொள்கையைக் கொண்டிருந்தாலும் எமது நாட்டில் மஹிந்த காலம் வரும் வரை மொத்த தேசிய உற்பத்தி வருடத்துக்கு 2 கோடி டொலராகவே இருந்தது.

அதாவது டீ.எஸ், டட்லி, பண்டாரநாயக்க, சிறிமாவோ பண்டாரநாயக்க, ஜே.ஆர்.ஜயவர்தன, ரணசிங்க பிரேமதாஸ ஆகியோரின் காலங்களில் மொத்தத் தேசிய உற்பத்தி 2 கோடி டொலருக்கும் குறைவாகக் காணப்பட்டது.

கடந்த 2010 இன் பின்னர் எமது நாடு நடுத்தர வருமானம் பெறும் நாடாக மாறியது. ஆனால் 2014ஆம் ஆண்டில் எமது நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தி 8 கோடி டொலர் வரை அதிகரித்தது.

அதாவது சர்வதேசம் கூட ஏற்றுக் கொள்ளும் நாடாக மாறியது. ஆனால் துரதிஷ்டவசமாக 2015ஆம் ஆண்டு அரசு வீழ்ந்தவுடன் வந்த அரசின் காலத்தில் அனைத்துமே வீழ்ச்சி அடைந்தன.

அதன் பயனாக எமது நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி 890 கோடி அமெரிக்க டொலராகும். அதனால் நாட்டில் அனைவரும் சிரமத்துக்குள்ளானார்கள்.

பொருளாதார வீழ்ச்சி வேகம் 7வீதமாக இருந்தது பின்னர் 2 வீதமாக குறைந்தது. வேலைவாய்ப்புகள் இல்லாமற் போனது. வட்டிவீதம் அதிகரித்தது. பணத்தின் பெறுமதி சரிவடைந்தது. கடனைச் செலுத்த முடியாமல் தற்கொலை செய்து கொண்டார்கள்.

எனவேதான் இந்நிலைமையை மாற்றுவதற்குரிய வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்காகவே கோட்டாபய ராஜபக்ஷவிடம் நாட்டை மக்கள் ஒப்படைத்துள்ளனர் – என்றார். (ஐ)

# தேவிபுரம் - சுதந்திரபுரம் இணைப்புப் பாலம் சேதம்



முல்லைத்தீவு, டிசெ. 17

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைய நாட்களாக பெய்த கன மழையால், பல்வேறு இடங்களிலும் பல பாதிப்புக்கள் பதிவாகியுள்ளன.

இவ்வாறான நிலையில் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட தேவிபுரம் ஆ பகுதியையும் சுதந்திரபுரத்தையும் இணைக்கும் பாலமொன்றும் இந்த அனர்த்தத்தில் சேதமடைந்துள்ளது.

இந்தப் பாலம் சேதமடைந்துள்ளதால் அந்த வீதி ஊடாகப் போக்குவரத்து நடவடிக்கையை மேற்கொள்ளும் மக்கள் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

சேதமடைந்த பாலத்தின் மீது, மரப்பாலம் ஒன்றை அமைத்து, அதனையே தற்காலிகமாக அந்தப் பகுதி மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே அந்தப் பாலத்தைத் துரிதமாகப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)



# மின்தடை

யாழ்ப்பாணம், டிச.17

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை **காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரை -**

**வவுனியா பிரதேசத்தில் -**

கணேசபுரம் கிராமம், மகாறம்பைக்குளம் கிராமம், கூமரங்குளம் கிராமம், செட்டிகுளம் நகரம், ஒட்டறங்குளம், பம்பைமடுவிலிருந்து பிரமணாளங்குளம் வரை, பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம் ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில் -**

நாகதாழ்வு, திருக்கேதீஸஸ்வரம். ஆகிய பிரதேசங்களிலும்–

– மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியிய லாளர் அறிவித்துள்ளார்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட நான் தயார்

## கரணமடிக்கிறார் கருணா

மட்டக்களப்பு, டிசெ. 17

தமிழர்களின் நலன் கருதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படத் தான் தயாராகவே உள்ளார் என கருணா அம்மான் எனப்படும் முன்னாள் பிரதியமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பல்வேறு பிரச்சினைகள் காரணமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

வடக்கு மாகாணத்துக்கு வேறு பிரச்சினைகள், கிழக்கு மாகாணத்துக்கு வேறு பிரச்சினைகள் உள்ளன. கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரை அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து போட்டியிட்டால்தான் பல நாடாளுமன்ற உறுப்பினர்களை உருவாக்க முடியும் அல்லது தமிழ் முதலமைச்சரை உருவாக்க முடியும் எனவும் கருணா தெரிவித்தார். (ஐ)

# குடியுரிமை சட்டத்திருத்தத்துக்கு எதிராக இந்தியாவில் வெடித்தன போராட்டங்கள்!

## பரவலாகப் பல இடங்களிலும் பெரும் வன்முறைகள்



புதுடெல்லி,டிசெ.17

குடியுரிமை சட்டத்திருத்தத்துக்கு எதிராக டெல்லியில் மாணவர்கள் போராட்டம் நடத்தியபோது, 4 அரசு பஸ்கள் தீயிட்டு கொளுத்தப்பட்டன. வன்முறையில் ஈடுபட்டவர்களை கலைக்கப் பொலிஸார் தடியடி நடத்தி, கண்ணீர் புகை குண்டுகளை வீசினார்கள்.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் குடியுரிமைச் சட்டத் திருத்தம் கடந்த வாரம் நிறைவேற்றப்பட்டது. ஜனாதிபதி ஒப்புதலை பெற்றுள்ள இந்த சட்டத்துக்கு எதிராக அசாம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களில், பெரும் போராட்டம் வெடித்துள்ளது.

போராட்டம், வன்முறையாக மாறி உள்ளது. வன்முறையை ஒடுக்க இராணுவம் விரைந்துள்ளது. வதந்திகள் பரப்பப்படுவதை தடுப்பதற்காக, பலபகுதிகளிலும் இணையத்தளச் சேவை முடக்கப்பட்டுள்ளது.

குடியுரிமை சட்டத்துக்கு எதிராக, டெல்லியில் மதுரா சாலையில் ஜாமியா மில்லியா இஸ்லாமியா மாணவர்கள் நேற்று முன்தினம் போராட்டம் நடத்தினர். அப்போது, அவர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது.

இதையடுத்து, டெல்லிப் போக்குவரத்து கழகத்தின் 4 பஸ்களை ஒரு கும்பல் தீவைத்து கொளுத்தியது. 2 பொலிஸ் வாகனங்களும் எரிக்கப்பட்டன.

தீயை அணைக்க வந்த தீயணைப்பு வாகனங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில், ஒரு தீயணைப்பு வாகனம் சேதம் அடைந்தது. 6 பொலிஸாரும் காயம் அடைந்தனர்.

இதைத் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டவர்களைப் பொலிஸார் தடியடி நடத்தியும், கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் கலைத்தனர். இதில் 35 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அமைதியாகப் போராட்டம் நடத்திய தங்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தி, வன்முறைக்கு வித்திட்டனர் என மாணவர்கள் குற்றம் சாட்டினர்.

பொலிஸ் தடியடிக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில், டெல்லி பொலிஸ் தலைமை அலுவலகத்தின் முன்பு ஏராளமானவர்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதுபோல், வட கிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள், டெல்லி ஜந்தர்மந்தரில் நேற்று முன்தினம் போராட்டம் நடத்தினர்.

**அசாமில்**

அசாம் மாநிலத்தில் வன்முறையை ஒடுக்குவதற்காக, கவுகாத்தி, திப்ரூகர் உள்ளிட்ட மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்தது. கவுகாத்தி மாவட்டத்திலும், திப்ரூகர் மாவட்டத்தின் சில பகுதிகளிலும் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை ஊரடங்கு தளர்த்தப்பட்டது. இந்த தகவலை பொலிஸார்ஒலிபெருக்கிமூலம்ஆங்காங்கேஅறிவித்தனர்.

6 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. இவற்றில் பூட்டானுக்கு செல்லும் விமானமும் அடங்கும். நீண்ட தூர ரெயில்கள் இன்னும் இயக்கப்படவில்லை.

அசாமில், குடியுரிமை சட்டத்துக்கு எதிராக மாணவர்கள் அமைப்புகள் நேற்றும் போராட்டம் நடத்தின. இடதுசாரி கட்சிகள் தர்ணா போராட்டம் ஈடுபட்டன.

கடந்த 12 ஆம் திகதி நடந்த துப்பாக்கி சூட்டில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த 2 பேர் நேற்று உயிரிழந்தனர். எனவே, துப்பாக்கி சூட்டுக்கு பலியானோர் எண்ணிக்கை 4 ஆக உயர்ந்தது.

மாநில நிலைவரத்தை விளக்குவதற்காக, பிரதமர் மோடி, மத்திய உள்துறை மந்திரி அமித் ா ஆகியோரை விரைவில் சந்திக்க முதலமைச்சர் சர்பானந்தா சோனோவால் முடிவு செய்துள்ளார்.

**மேற்குவங்கத்தில்**

குடியுரிமை சட்ட எதிர்ப்பு போராட்டம், மேற்கு வங்காளத்துக்கும் பரவியது. பஸ்கள், ரயில்கள், ரயில் நிலையங்களுக்கு வன்முறை கும்பல் தீவைத்தது. குறிப்பாக, முர்ஷிதாபாத் மாவட்டத்தில் 5 ரெயில்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

நேற்று 4 ஆவது நாளாகவும் வன்முறை நீடித்தது. நடியா, பிர்பும், வடக்கு 24 பர்கானாக்கள், ஹவுரா ஆகிய மாவட்டங்களில் வன்முறை சம்பவங்கள் நடந்தன. சில பகுதிகளில் சாலையில் டயர்களை போட்டு எரித்தனர். சாலைகளில் மறியலில் ஈடுபட்டனர். கடைகள் சூறையாடப்பட்டன.

நடியாவில், கல்யாணி எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலையை முடக்கிய போராட்டக்காரர்கள், குடியுரிமை சட்ட நகல்களை தீயிட்டு கொளுத்தினர். ஹவுரா மாவட்டத்தில் பேரணி நடத்தியவர்கள், மோடி அரசுக்கு எதிராக கோஷமிட்டனர். தெற்கு 24 பர்கானாக்கள் மாவட்டம் மல்லிக்பூரில் ரயில் மறியல் நடந்தது.

மால்டா, முர்ஷிதாபாத், ஹவுரா, வடக்கு 24 பர்கானாக்கள், தெற்கு 24 பர்கானாக்கள், வடக்கு தினாஜ்பூர் ஆகிய 6 மாவட்டங்களில் இணையத்தளச் சேவை முடக்கிவைக்கப் பட்டுள்ளது.

அதே சமயத்தில், மேற்கு வங்கத்தில் 2 நாள்களுக்கு பிறகு, நேற்று ரெயில் போக்குவரத்து சீரடைய தொடங்கியது. ரத்து செய்யப் பட்டிருந்த ரெயில்கள் மீண்டும் இயக்கப்பட்டன.

குடியுரிமைச் சட்டத்துக்கு எதிராக, மாநிலம் முழுவதும் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியினர் நேற்று முன்தினம் பேரணி நடத்தினர். இதில், மந்திரிகளும், மூத்த தலைவர்களும் பங்கேற்றனர். பதாகைகள், பனர்களை ஏந்திச்சென்ற தொண்டர்கள், மோடி அரசுக்கு எதிராக கோமிட்டனர். குடியுரிமை சட்டத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்று அவர்கள் குரல் எழுப்பினர்.

திரிணாமுல் காங்கிரஸ் தலைவரும், முதலமைச்சருமான மம்தா பானர்ஜி, நேற்று முதல் 3 நாள்களுக்கு போராட்டம் நடத்துகின்றார். போராட்டக்காரர்கள், சட்டத்தை கையில் எடுக்காமல் அமைதியாக போராட வேண்டும் என்று மம்தா பானர்ஜி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆனால், கலவரங்களை ஒடுக்க மாநில அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மாநில பா.ஜனதா பொதுச்செயலாளர் சயந்தன் பாசு குற்றம் சாட்டியுள்ளார்.

**மேகாலயாவில்**

மற்றொரு வடகிழக்கு மாநிலமான மேகாலயாவின் தலைநகர் ஷில்லாங்கில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்தது. அங்கு நேற்று காலை 6 மணி முதல் மாலை 7 மணிவரை ஊரடங்கு தளர்த்தப்பட்டது.

எஸ்.எம்.எஸ். மற்றும் இணையத்தளச் சேவைகள், 48 மணி நேரம் முடக்கி வைக்கப்பட்டுள்ளன. வங்கிகள், கல்வி நிறுவனங்கள், சந்தைகள் மூடப்பட்டு இருந்தன.

இதற்கிடையே, மேகாலயா மாநில சட்டசபையின் ஒரு நாள் சிறப்பு கூட்டம், வருகிற 19 ஆம் திகதி நடக்கிறது. அதில், வெளிமாநிலத்தினர் மேகாலயாவுக்குள் சிறப்பு அனுமதி பெற்று நுழையும் 'இன்னர் லைன் பெர்மிட்' அந்தஸ்து அளிக்கக்கோரி தீர்மானம் நிறைவேற்ற மேகாலயா அரசு திட்டமிட்டுள்ளது.

மணிப்பூர் மாநிலத்திலும் சில பகுதிகளில் அமைதியான முறையில் போராட்டம் நடந்தது.

# அரசியல் ஆதாயத்துக்காக ராகுல் திருடிய 'காந்தி' என்ற பெயரைக் கைவிட வேண்டும்

## பாரதீய ஜனதாக் கட்சி வலியுறுத்தல்



புதுடெல்லி,டிசெ.17

அரசியல் ஆதாயத்துக்காக திருடிய 'காந்தி' என்ற பெயரை ராகுல் கைவிட வேண்டும் என பா.ஜனதா வலியுறுத்தி உள்ளது.

காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, நான் ராகுல் சாவர்க்கர் அல்லன், ராகுல் காந்தி. எனவே, மன்னிப்பு கேட்க மாட்டேன் என்று சமீபத்தில் கூறியிருந்தார்.

இதற்கு பா.ஜனதா சார்பில் அதன் செய்தி தொடர்பாளர் சம்பித் பத்ரா நேற்றுப் பதில் அளித்தார். அவர் கூறியவை வருமாறு:-

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி, சாவர்க்கரை 'மண்ணின் மைந்தர்' என்று கூறினார். ஆனால், அவருடைய பேரன் ராகுல் காந்தியோ, சாவர்க்கரை அவதூறாகப் பேசுகிறார்.

மேலும், ராகுல் காந்தி குடும்பம், அரசியல் ஆதாயத்துக்காக 'காந்தி' என்ற பெயரை திருடி, தங்களது குடும்பப்பெயராக ஆக்கி விட்டது. ஆகவே, 'காந்தி' என்ற பெயரை ராகுல் கைவிட வேண்டும். - இவ்வாறு அவர் கூறினார்.

### ஆந்திர நிலையை விளக்க

# பின்னோக்கி நடந்து நூதனப் போராட்டம்!

ஆந்திராவில் ஜெகன் மோகன் தலைமையிலான அரசு மாநிலத்தின் வளர்ச்சியை பின்னோக்கி இட்டுச் செல்வதாகக் கூறி, தெலுங்கு தேசம் கட்சியினர் பின்னோக்கி நடந்து நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தெலுங்கு தேசம் கட்சியின் தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான சந்திரபாபு நாயுடு தலைமையில் நடைபெற்ற இந்த போராட்டத்தில், பங்கேற்ற அனைவரும் முழக்கங்களை எழுப்பியவாறே பின்னோக்கி நடந்து தங்கள் எதிர்ப்பை பதிவு செய்தனர்.



# ஐ.நா. கப்பலுக்குப் பாதுகாப்பாக சென்ற இந்திய கடற்படை கப்பல்

ஆபிரிக்க நாடுகளுக்கு நிவாரணப் பொருள்களைக் கொண்டு சென்ற அமெரிக்கக் கப்பலுக்கு இந்தியக் கடற்படையின் திரிகாந்த் கப்பல் பாதுகாப்புக்குச் சென்றுள்ளது.

ஐ.நா. சபையின் உலக உணவு திட்டத்தின் கீழ் கென்யா மற்றும் சோமாலியா ஆகிய நாடுகளில் உள்ள நலிவடைந்த மக்களுக்கு, அமெரிக்காவைச் சேர்ந்த எம்.வி.அன்னிகா எனும் வணிக கப்பலில், ஊட்டச்சத்து மற்றும் நிவாரணப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

இந்தக் கப்பல் பயணிக்கும் சோமாலியாவின் கிழக்கு கடற்கரைப் பகுதியில், கடற்கொள்ளையர்களின் அச்சுறுத்தல் இருப்பதால் இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான திரிகாந்த் கப்பல் பாதுகாப்புக்குச் சென்றுள்ளது. இது குறித்த தகவல் இந்திய கடற்படையின் ட்விட்டர் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.



காலைக்கதிர் Kalaikathir



## பிறந்த நாளுக்காக வெள்ளைத் தீவு சென்ற ஆஸி மருத்துவ மாணவி எரிமலைக்குப் பலி

### உயிரிழந்தோர் எண்ணிக்கை 16 ஆக உயர்வு

வெலிங்டன்,டிசெ.17

பிறந்த நாளைக் கொண்டாட நியூசிலாந்து சென்ற மருத்துவ மாணவி, எரிமலை வெடிப்பில் பரிதாபமாக பலியானார்.

நியூசிலாந்தின் புகழ்பெற்ற சுற்றுலா தலமான வெள்ளைத்தீவில் உள்ள எரிமலையில் கடந்த திங் கட்கிழமை வெடிப்பு ஏற்பட்டது. இதில் நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஜேர்மனி, சீனா, இங்கிலாந்து மற்றும் மலேசியாவை சேர்ந்த சுற்றுலா பயணிகள் 47 பேர் சிக்கிக்கொண்டனர்.

உடனடியாக மீட்புப் பணிகள் முடுக்கிவிடப்பட்டன. எனினும் எரிமலை வெடிப்பில் சிக்கி 9 பேர் பலியா னார்கள். 30 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர். 8 பேர் மாயமாகினர். அவர்களில் 6 பேர் நேற்று முன்தி னம் பிணமாக மீட்கப்பட்டனர். மேலும் மருத்துவம னையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் நேற்று சிகிச்சை பலனின்றி இறந்தார். இதன் மூலம் பலி எண்ணிக்கை 16 ஆக உயர்ந்துள்ளது.

இந்த நிலையில் எரிமலை வெடிப்பில் சிக்கி உயிரி ழந்தவர்களின் விவரங்களை நியூசிலாந்து அரசு வெளியிட்டு உள்ளது. இதில் ஆஸ்திரேலியாவை சேர்ந்த இளம் பெண் ஒருவர் தனது பிறந்தநாளை கொண்டாட குடும்பத்தோடு வெள்ளை தீவுக்குச் சுற்றுலா சென்ற போது எரிமலை வெடிப்பில் சிக்கி உயிரிழந்தமை தெரிய வந்துள்ளது.

அவர் ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரை சேர்ந்த கிரிஸ்டல் ஈவ் புரோவிட் (வயது 21) ஆவார். அங்குள்ள மருத்துவக் கல்லூரியில் கால்நடை மருத் துவம் படித்து வந்தார். இவர் தனது பிறந்தநாளை கொண்டாடும் விதமாக தனது தாய், தந்தை மற்றும் சகோதரியுடன் நியூசிலாந்தின் வெள்ளைத் தீவுக்குச் சுற்றுலா சென்றார்.

அப்போது ஏற்பட்ட எரிமலை வெடிப்பில் சிக்கி கிரிஸ்டல் சம்பவ இடத்திலேயே பலியானார். அவரது தந்தை மற்றும் சகோதரிக்கு பலத்த தீக்காயம் ஏற்பட்டது. அவரது தாய் எந்தவித காயங்கள் இன்றி உயிர் தப்பினார். கிரிஸ்டலின் இறப்பு அவரது குடும்பத்தி னரை சோகத்தில் ஆழ்த்தி உள்ளது.

## இங்கிலாந்தில் தொழிலாளர் கட்சியின் தலைவராக இந்திய வம்சாவளி பெண்?

### போட்டிக் களத்தில் குதித்தார் லிசா நண்டி எம்.பி.



லண்டன்,டிசெ.17

இங்கிலாந்தில் தொழி லாளர் கட்சிக்கு இந்திய வம் சாவளி பெண் எம்.பி. தலை வர் ஆவாரா என்பது குறித்து தகவல் வெளியாகி உள்ளது.

இங்கிலாந்து நாட்டில் நடந்த நாடாளுமன்ற தேர் தலில் பழமைவாத (கொன் சர்வேட்டிவ்) கட்சி அமோக வெற்றி பெற்று ஆட்சியைத் தக்க வைத்துக்கொண்டுள்ளது.

இந்த நிலையில் தோல்வியைத் தழுவியுள்ள எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியின் தலைவர் ஜெரேமி கார்பைன் பதவி விலக வேண்டும் என்று கட்சிக்குள் குரல் வலுத்து வருகிறது. அவரும் இன்னொரு பொதுத்தேர்தலுக்கு கட்சியை நான் வழி நடத்த மாட்டேன் என அறிவித்துள்ளார். இந்த நிலையில் தொழிலாளர் கட்சியின் தலைவர் பதவி யாருக்கு என்ற கேள்வி அங்கு எழத்தொடங்கி விட்டது. 40 வயதான இந்திய வம்சாவளி பெண் எம்.பி. லிசா நண்டி போட்டியில் குதித்துள்ளார். இதை அவர் நேற்று உறுதி செய்தார்.

நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் இவர் வடமேற்கு இங்கிலாந்தில் உள்ள விகான் தொகுதியில் இருந்து மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. இவரது தந்தை இந்தியர், தாயார் ஆங்கிலேயர் என்பது குறிப்பிடத்தகுந்தது.

# பிலிப்பீன்ஸில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் குடும்பத்துடன் ஜனாதிபதி உயிர் தப்பினார்

### மூவர் உயிரிழப்பு; டசின் கணக்கானோர் காயம்











மணிலா,டிசெ.17

பிலிப்பீன்ஸை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் தாக்கியது. இதில் ஆறு வய துச் சிறுமி உட்பட மூன்று பேர் உயிரிழந்தனர். டசின் கணக்கானோர் காயமடைந்தனர். நாட்டின் அதிபர் தனது குடும்பத்துடன் உயிர் தப்பினார்.

பிலிப்பீன்ஸின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள மின்டனாவ் தீவு, அந்த நாட்டின் இரண்டாவது பெரிய தீவு ஆகும். அந்தத் தீவில் அதிக மக்கள் தொகையை கொண்ட தவோ நகரை மையமாகக் கொண்டு ஞாயிறு பிற்பகல் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் தாக்கியது. இது ரிக்டர் அளவுகோலில் 6.9 புள்ளிகளாகப் பதிவானது.

இந்த நிலநடுக்கம் தவோ நகரில் இருந்து 61 கி.மீ. தென்மேற்கு பகுதியில் பூமிக்கு அடியில் 28 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் வீடுகள், கடைகள் உள்ளிட்ட கட்டடங்கள் பயங்கரமாக குலுங்கின. சில தகர்ந்தன. இதனால் பீதியடைந்த மக்கள் அலறியடித்துக்கொண்டு வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் புகுந்தனர்.

அதேபோல் அலுவலகங்களில் வேலை பார்த்து கொண்டிருந்தவர்கள், கடைகளில் பொருள்கள் வாங்கி கொண்டிருந்தவர்கள் என அனைவரும் அங்கிருந்து வெளியேறி திறந்தவெளி மைதானங்களில் குவிந்தனர்.

தவோ, மாட்டனாவ் ஆகிய நகரங்களில் அரசு அலு வலகங்கள் உள்பட ஏராளமான கட்டடங்கள் இடிந்து சேதம் அடைந்தன. ஒரு சந்தை அப்படியே தகர்ந் தது. சாலைகளிலும் பெரிய அளவில் விரிசல்கள் ஏற் பட்டன.

நிலநடுக்கம் காரணமாக பல இடங்களில் மின்கம்பங் கள் சரிந்து விழுந்தமையால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. மேலும் சில இடங்களில் பாறைகள் உருண்டு விழுந்தமையோடு, பயங்கர நிலச்சரிவும் ஏற்பட்டன.

தவோ நகரில் வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் இடிபாடுகளில் சிக்கி 6 வயதுச் சிறுமி பரிதாபமாக இறந்தாள். இதே போல் கட்டட இடிபாடுகளில் சிக்கி சுமார் 20 பேர் பலத்த காயம் அடைந்தனர்.

அவர்கள் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவம னைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு உள்ளனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புக் குழுவினர் குவிக்கப்பட்டு முழுவீச்சில் மீட்பு பணிகள் நடந்து வருகின்றன.

பல பாடசாலைகள் மோசமாகச் சேதமடைந்தன. அதிர்ஷ்டவசமாக நிலநடுக்கம் ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்டதால் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. அதனால் பாடசாலைகள் பெருஞ்சேதம் அடைந்த போதும் மனித இழப்புகள் தவிர்க்கப்பட்டன.

நிலநடுக்கம் தாக்கிய தவோ நகரில்தான் அந்த நாட்டின் அதிபர் றொட்ரிகோ டியூட்டேர்டே தனது குடும்பத்துடன் வசித்து வருகிறார். நிலநடுக்கம் ஏற்பட்டபோது, அவர் தனது மகளுடன் வீட்டில் இருந்தார். அவர்கள் வீட்டில் பல சுவர்கள் விரிசல் கண்டு பெரும் சேதம் அடைந்தன.

எனினும் அவர்கள் இருவருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்றும், அவர்கள் நலமாக இருக்கின் றனர் எனவும் அதிபரின் செய்தித் தொடர்பாளர் சால்வ டார் பான்ஸலோ தெரிவித்துள்ளார்.

அதே போல் அதிபரின் மனைவி ஹோனிலெட் காரில் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோது, நில நடுக்கத்தில் சிக்கி அவரது கார் குலுங்கியதாகவும் எனி னும் காயங்கள் இன்றி அவர் உயிர் தப்பினார் எனவும் சால்வடார் கூறினார்.

இந்த நிலநடுக்கத்தால் அதிக பாதிப்புகள் ஏற்பட்டிருக்க வாய்ப்பு இருப்பதாக அந்த நாட்டின் எரிமலை மற்றும் பூவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பிலிப்பீன்ஸ் நாடு, புவிதட்டுகள் அடிக்கடி நகருகிற இடத்தில் அமைந்திருப்பதால் அங்கு நிலநடுக்கம் ஏற்படுவது வாடிக்கையான ஒன்றாகிவிட்டது.

கடந்த ஒக்டோபர் மாதம் இதே மின்டனாவ் தீவில் 6.0 புள்ளிகள் அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் தாக்கியதில் 20 பேர் பலியானமை நினைவு கூரத்தக்கது.

# பள்ளத்தில் பாய்ந்தது பஸ் நேபாளத்தில் 14 பேர் பலி



நேபாளத்தில் பஸ் ஒன்று கவிழ்ந்த விபத்தில் 14 பேர் உயிரிழந்தனர்.

காலின்சவுக் பகுதியில் உள்ள புனித தலத்தில் இருந்து பக்தாபூர் நகருக்கு 40 பேருடன் பயணித்த பஸ் ஒன்று, நேற் முன்தினம் காலை சிந்துபால்சவுக் மாவட்டத்தில் உள்ள சுன்கோஷி பகுதியில் இருக்கும் ஆபத்தான வளைவில் திரும்பியது.

அப்போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் அருகிலுள்ள பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 12 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.


காயமடைந்தவர்கள் அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி மேலும் 2 பேர் உயிரிழந்தனர்.

# வேதனையில் சாதனை!

## றூபென்ஸ் – நியூசிலாந்தின் எரிமலை வெடிப்பு!

பாற்கடல்
மு.சிவநேசன்
sivanesan@usa.com

(நேற்றைய தொடர்ச்சி)



காலை இழந்தால் பிச்சை எடுக்கத் தான் லாயக்கு. அரச நிவாரணங்களைநம்பியவாழ்க்கை. இனி வாழ்க்கை பறி போய்விட்டது என்று தாமாக பலர் முடிவு கட்டி விடுகிறார்கள். எங்கே எதிலே அடுத்த ஆபத்து நெருங்கி வருகிறதோ என அஞ்சி அஞ்சி மீதிக் காலத்தை மிகுந்த எச்சரிக்கையுடன் வாழத் தலைப்படுகிறார்கள். அந்த இடம்தான் சாதனைகளின் ஆரம்பம், இழப்பில் இருந்து மீண்டு எழும்போது, மரணத்தை சந்தித்து மீளும்போது, மீதி வாழ்க்கை ஒரு போனஸ், அதனை வாழும்போது உருப்படியாக எதையாவது சாதித்து வாழ வேண்டும், இனி எதற்கும் துணியலாம் என மிகச் சிலரே புறப்படுகிறார்கள்.

நான் அந்த இடத்தின் அழகில் லயித்து இருந்தேன். குடிலின் உச்சியில் ஏறி நின்றபோது நேரம் 19.30 ஆக இருந்தது. கிறிஸ்தி உள்ளே போய் உறங்கி விட்டான். அவனுக்கோ இதுதான் முதலாவது மலையேற்றம். எல்லாம் அமைதியாகவே இருந்தது. மின்சாரம் கிடையாது. தரை முதல் கூரை வரை எல்லாம் பலகை மட்டுமே. அது இரவுத் தங்கலுக்கு ஏற்ற இடம் என்று கருத முடியாது. ஏறுகிறவர்கள் காலையில் வந்தால் சற்று அங்கே இளைப்பாறலாம். சிறு சிறு சீறல்கள் ஏற்பட்டால் தலையில் எரிகற்கள் விழுந்துவிடாமல் தம்மைப் பேணிக் கொள்ளலாம். அலுவல் முடிந்ததும் கீழே உள்ள வசதியான முகாம்களுக்கு திரும்பிவிடலாம். இதுவே நிலமை. எரிமலை உச்சியில் பாம்போடு படுக்க யாரும் துணிவார்களா? பல வருடங்களாக உறங்கிக் கிடந்த எரிமலையும் அன்றைய இரவில்ததான் சீறல் வேண்டுமா?




அழகு அழகென்று எத்தனை படங்களைத் தான் பிடித்துத் தள்ளுவது? வேறு வழியின்றி இவனும் உறங்கப் புகுந்தான். உறக்கம் வரவில்லை. நெருக்கமாக கிறிஸ்தியின் குறட்டை ஒலி வேறு பாரிய மரங்களை அறுத்துத் தள்ளும் வாள்போல ரீங்காரம் செய்துகொண்டு இருந்தது. ஏனோ அதனை ரசிக்க கட்டிய மனைவியும் தயாரில்லை.

படுத்தவன் ஏதோ இரைச்சல் கேட்டு எழுந்து இருந்தபோது கும்மிருட்டில் எதுவும் தெரியாத வேளையில்தான் கதவு படாரெனத் திறந்து கொள்ள, உள்ளே மடை திறந்த வெள்ளம் போல, குளிரூட்டப்பட்ட இரசாயனப் பேராறு பாய்ந்து கொண்டது.

எனது கால் தரையில் பலகைகளுக்கிடையில் எக்கச்சக்கமாக மாட்டிக் கொண்டது. நானும் கிறிஸ்தியும் முயன்றும் அதனை மீட்க முடியவில்லை. கீழே சென்று உதவி பெற கிறிஸ்தி முடிவு எடுத்தாலும் அவனுக்கு தேவையான வழிகாட்டல்களை நானே சொல்லி அனுப்பவேண்டி இருந்தது. இடம்மாறி போய் இக்கட்டில் அவன் மாட்டிவிடவே வாய்ப்புக்கள் அதிகம். சீற்றம் ஒரு நிமிடத்தில் ஓய்வுக்கு வந்த கதை அப்போது தெரியாது. அந்த நேரத்துப் தற்றம் ஓர் உச்சக் கட்டமே.

கடைசியாக எதுவும் நிச்சயமற்ற நிலமையில் ஒருவாறு அவனை அனுப்பிய பின் என்னை அரவணைக்கத் துடித்த மயக்கத்தோடு நான் போராடினேன். கடந்தகால வாழ்க்கை நினைவுகள் படமாக ஓடின. எனது காலை நானே வெட்டிக் கொண்டு வெளியேற நினைத்தாலும் கூரான ஆயுதங்கள் எதுவும் கைக் கெட்டும் தொலைவில் இருக்கவில்லை. காலைப் பிடுங்கவும் இயலவில்லை. கிறிஸ்தி சென்று பதினைந்து நிமிடங்கள் ஆகியிருக்காது. நேரம் இரவு ஒன்பது மணி இருக்கலாம்.மயக்கம்என்னை ஆண்டு கொண்டது.

நினைவு திரும்பியபோது மற்றவர்களின் எதிர்பார்ப்புகள் என்னைப் பிரபலமாக ஆக்கிக் கொண்டிருந்தன என்பதனை உணர அதிக காலம் பிடிக்கவில்லை. முதலில் எனது வைத்தியர்கள், தாதியர்கள், அடுத்து பெற்றோர், நண்பன் கிறிஸ்த்தி. அவர்களைத் தாண்டி வெளியே மொய்க்கும் பத்திரிகையாளர்கள் பற்றியும், ஒரு தாதி தகவல் கூறியிருந்தார். விபத்து எனது காலைப் பறித்ததைவிட என்னை முற்றிலும் மாற்றி ஒரு புதிய மனிதனை உருவாக்கப் போகிறது என்பதனை நான் உணரத் தொடங்கியிருந்தேன். நான் கற்பனையிலும் எண்ணியிராத ஒரு வாழ்க்கைக்கு அது அடிகோலிவிட்டது.

நான் இந்த விபத்தை சந்தித்து இருக்காவிட்டால் ஒரு முப்பது பிள்ளைகளின் ஆசிரியராக, ஒரு விடுமுறை விரும்பியாக, மலையேறும் எண்ணம் கொண்டவனாக வாழந்திருப்பேன். இந்த மாற்றம் இன்று 3000 பிள்ளைகளை கொண்ட நிறுவனத்தின் அமைப்பாளராக, அந்த எண்ணிக்கை மேலும் வளர்ச்சிப் போக்கை காட்டுவதாக சேவை என்று அர்ப்பணிப்பு மிக்க ஒரு வாழ்க்கையை எனக்குத் தந்துவிட்டதில் மனத் திருப்தியே என்கிறான் வில்லியம் பைக்.

அவனது உயிர்காத்த நண்பன், தற்போதும் இணை பிரியா நண்பன் ஜேம்ஸ் கிறிஸ்திக்கு கிடைக்கும் பாராட்டுகள்,விருது கள் பற்றி சொல்லத் தேவையில்லை.



பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்து, இக் கட்டுரை வரையப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் 09.12.2019 இல் மீண்டும் ஒரு எரிமலைச் சீற்றம் நியூசிலாந்தில் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. அதே வட தீவில் அமைந்துள்ள வெள்ளைத் தீவில் சுமரர் ஐம்பது பேர் வரையிலான உல்லாசப் பயணிகள் இதில் மாட்டுப்பட்டு தவித்திருக்கிறார்கள். இவர்களில் 28 ஆஸ்திரேலியர்கள், ஒன்பது அமெரிக்கர்கள், ஐந்து நியூசிலாந்துக்காரர் மற்றும் பிரித்தானிய, ஜேர்மனிய, மலேசிய, சீனப் பிரஜைகள் அடக்கம்.

இறந்தவர்களின் எண்ணிக்கை பதினாறைத் தாண்டுவதாக நம்பப்படுகிறது. காயமடைந்தவர்கள் பலர் மீட்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்குரியதாகவே இருக்கிறது. எரிமலை தொடர்ந்து சீற்றம் தணியாது குமுறுவதால் உடல்களை மீட்பதில் தாமதம் நிலவுகின்றது. பொலிஸாரின் ரோன் கமெராக்கள் அந்தப் பிராந்தியத்தில் வட்டமடித்து வருகின்றன.

காயமடைந்தவர்கள் பலத்த எரிகாயங்களுக்கு ஆளாகி உள்ளனர். இவர்களுக்கு தோல் ஒட்டு சிகிச்சை அவசரமாகச் செய்யப்பட வேண்டி உள்ள ஒரு நெருக்கடி நிலமை ஏற்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய சகோதரர்களான Berend Hollander, (16 வயது), Matthew Hollander, 13 வயது ஆகியோர் இறந்தமை ஊர்ஜிதமாகி உள்ள நிலையில், அவர்களது பெற்றோர் கண்டு பிடிக்கப்படவில்லை.

ஆஸ்திரேலியாவிலும் ஏனைய நாடுகளிலும் உறவினர்கள் குமுறிக் கொண்டே இருக்கிறார்கள். உரிய எச்சரிக்கைகள் ஏன் விடப்படவில்லை? உடல்களை மீட்பதில் தாமதம் ஏனோ? என்கின்ற கேள்விகள் ஒருபுறம். தணியாத எரிமலைச் சீற்றம் மறுபுறம். நாங்கள் ஓயமாட்டோம் சந்தர்ப்பம் பார்த்து காத்திருக்கிறோம் என்கின்றனர் பொலிஸார்.

கிறிஸ்துமஸ் நெருங்கும் இவ் வேளையில் செய்திகள் பல நாடுகளை சோகத்தில் ஆழ்த்தி வருகிறன. உல்லாசப் பிரியர்கள் ஆபத்தான இடங்களை நாடிச் செல்வது இப்படியான சந்தர்ப்பங்களில் பலருக்கும் பல சங்கடங்களைத் தந்து விடுகிறது.

ஐந்து நாள்கள் கழிந்த நிலையில் இன்னும் களநிலைமை பரபரப்பாகவே காணப்படுகிறது.

(முற்றும்)



# சு.க. என்னதான் கூறினாலும் மொட்டில்தான் களமிறக்கம்!

## அடித்துக் கூறுகிறார் பிரசன்ன ரணதுங்க



கொழும்பு, டிசெ. 17

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு எத்தகைய கூட்டணியை அமைத்தாலும் மொட்டுச் சின்னத்திலேயே பொதுஜன பெரமுன போட்டியிடும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதனைக் கூறினாலும் நாம் எதிர்வரும் பொதுத் தேர்தலில் மொட்டுச் சின்னத்திலேயே போட்டியிடுவோம். கட்சித் தலைவர்களுடன் எத்தகைய உடன்படிக்கைகளைச் செய்துகொண்டாலும் மக்களுக்கு அவர்களுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள உடன்படிக்கையே முக்கியமாகிறது. எவருடனும் அல்லது எந்தக் கட்சியுடனும் உடன்படிக்கை செய்து கொண்டாலும் மக்கள் எதிர்பார்ப்பு என்னவென்பதைத் தெரிந்து கொண்டே அதற்கிணங்க செயற்பட வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதனைக் கூறினாலும் நாம் எதிர்வரும் பொதுத் தேர்தலில் மொட்டுச் சின்னத்திலேயே போட்டியிடுவோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர 27 கட்சிகளுடன் அந்தக் கட்சி உடன்படிக்கை செய்துகொண்டுள்ளதாகவும், அந்த உடன்படிக்கைக்கிணங்க எதிர்வரும் பொதுத் தேர்தலில் நாற்காலி சின்னத்திலேயே போட்டியிடவேண்டுமென்றும் தெரிவித்து வருகின்றார்.

அந்தக் கட்சியின் தலைவர்கள் எத்தகைய உடன்படிக்கைகளை மேற்கொண்டாலும் இந்த நாட்டின் மக்களோடு செய்துகொண்டுள்ள உடன்படிக்கையே பெறுமதியானதாகும்.

தற்போது நாட்டு மக்கள் எம்முடனேயே உள்ளனர். எம்முடன் உடன்படிக்கை செய்தாயிற்று. அந்த உடன்படிக்கை மொட்டுக் கட்சியை வெற்றி பெறச் செய்வதே. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது – என்றார். (ஐ)

## தமிழ் மக்களுக்கு நன்றி கூறினார் பிரி. பிரதமர் பொரிஸ் ஜோன்சன்

லண்டன், டிசெ. 17

பிரிட்டன் பிரதமராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ள கொன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பொரிஸ் ஜோன்சன் தமிழ் மக்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகக் காணொளி ஒன்றை அவர் வெளியிட்டுள்ளார். ‘வணக்கம்’ எனத் தமிழில் கூறிப் பேச்சை ஆரம்பித்த பிரிட்டன் பிரதமர், தமிழ் மக்கள், தாங்கள் வாழும் நாட்டுக்காக வழங்கிய ஆதரவுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

கடந்த காலச் சம்பவங்களை அடுத்து இலங்கையில் மறுசீரமைப்பு செயல்முறை மற்றும் பொறுப்புக்கூறல் செயல்முறையை உரிய முறையில் செயற்படுத்தி, நீடித்த அமைதியை நிலைநாட்டுவதற்கு வாழ்த்துகிறேன் – என்றார்.

அத்துடன் பிரதமர் தனது காணொளியை ‘நன்றி’ எனக் கூறி நிறைவு செய்துள்ளார்.

பிரிட்டனின் கொன்சர்வேட்டிவ் கட்சி தனது கொள்கைப் பிரகடனத்தில் முதல் முறையாக இலங்கை தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழரசுக் கட்சியின் 70ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மரம் நடுகை





திருமலை, டிசெ. 17

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் திருகோணமலையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க வெள்ளை வில்வபத்திரிக் கோணேசர் ஆலயத்தில் மரம் நடுகை இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட வாலிபர் முன்னணியின் தலைவர் ஸ்ரீதர்சன் தலைமையில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.துரைரெட்ணசிங்கம் மற்றும் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவர் வி.குகதாஸன் உட்பட இலங்கைத் தமிழரசுக் கட்சி திருமலை மாவட்ட வாலிபர் முன்னணி உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாவட்டம் முழுவதும் தெரிவு செய்யப்பட்ட 70 கிராமங்களில் இந்த மரம் நடுகை வேலைத்திட்டம் இந்த மாதம் முழுவதும் இளைஞர் அணியினால் மேற்கொள்ளப்படவுள்ளது. அதன் ஆரம்ப நிகழ்வாக நேற்றைய மரம் நடுகை மேற்கொள்ளப்பட்டது. (ஐ)

# தனி நாடோ, தனி அலகோ இனி யாரும் கோரமுடியாது!

## மிரட்டுகிறார் அமைச்சர் கெஹலிய

கொழும்பு, டிசெ. 17

வாக்குகளைக் காரணம் காட்டி, தனி இராச்சியத்தையோ அல்லது தனியான அலகையோ இனிமேல் எந்தவொரு அடிப்படைவாதிகளும் கோர முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் கெஹலிய ரம்புக்



வெல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித் தேர்தலில் நாம் பாரிய வெற்றியை அடைந்துள்ளோம். இந்த வெற்றியில் ஒரு முக்கியத்துவம் காணப்படுகிறது. அதாவது, எந்தவொரு அடிப்படைவாதத்துக்கும் அடிபணியாமல்தான் இந்த வெற்றியை நாம் பெற்றுக் கொண்டுள்ளோம்.

72 வருடங்களுக்குப் பிறகு, சிங்கள மக்களின் வாக்குகளால் ஜனாதிபதியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த வெற்றியில் அனைத்து இன மக்களுக்கும் இடமுள்ளது. நல்லிணக்கம் என்பது பதாதைகளில் அல்லாது மக்களின் மனங்களில் இருந்து வரவேண்டும். இதுதான் உண்மையான வெற்றியாகும்.

எமது இந்த வெற்றியை இன்று எந்தவொரு அடிப்படைவாதிகளும் உரிமை கொண்டாட முடியாது. நாம் இனவாதிகள் அல்லர். உங்களுக்கு வாக்குகளைத் தருகிறோம். நீங்கள் எங்களுக்குத் தனி இராச்சியத்தைத் தாருங்கள் அல்லது தனி அலகு தாருங்கள் என இனி எவரும் எம்மிடம் கோர முடியாது. இந்த விளையாட்டுக்கள் எல்லாம் இனிமேல் எம்மிடம் செல்லுபடியாகாது – என்றார். (ஐ)

## வயலுக்குள் பாய்ந்தது வாகனம்



யாழ்ப்பாணம், டிசெ. 17

மட்டுவில் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர். குளிர்பானங்களை ஏற்றிச் சென்ற கனரக வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி வயல் காணி ஒன்றுக்குள் தடம் புரண்டது.


வேகமாக வந்த மோட்டார் சைக்கிளுக்கு இடம்கொடுக்க முற்பட்ட போதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. (ஐ)



மதமாற்ற சர்ச்சை தொடர்பாக கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் வரையும் வாராந்தக் கட்டுரைத் தொடரின் மூன்றாம் அங்கம் இது.

— கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் —

# பாவிகளை மன்னிப்பீராக!



**(சென்றவாரம்)**

**இவர்களது இவ் இருநிலைப்பட்ட போக்கையும் அதன் நோக்கத்தையும், அரசாங்கமும் போராளிகளும்அறிந்திருந்தபோதும், அம் மதத்தாரின் உலகளாவிய விரிந்த அரசியல், பொருளாதாரம் சார்ந்த செல்வாக்கை, அவ்விருவராலும் நிராகரிக்க முடியவில்லை. அதனால் இம்மதத்தார்தம் இருமைப்போக்கு வெற்றியாக இம்மண்ணில் ஓடிக் கொண்டிருந்தது. இன்றும் ஓடிக்கொண்டிருக்கிறது.**

உண்மை சுடும் என்றார் எழுத்தாளர் ஜெயகாந்தன்.
நான் சொல்லத் தொடங்கியிருக்கும் உண்மைகளும்,
பலரையும் சுடத்தொடங்கியிருக்கின்றன.
எதிர்வினையாய் வரத்தொடங்கியிருக்கும் கருத்துக்களிலிருந்து அது தெரிகிறது.
என் கருத்துக்களை மறுக்கமுடியாதவர்கள் என்மேல் பாயத்தலைப்படுகிறார்கள்.
கிறிஸ்தவர்கள் மதம் மாற்றினால் சைவர்கள் ஏன் மதம் மாறவேண்டும்?
அப்படி அவர்கள் மாறுகிறார்கள் என்றால்,
உங்கள் சமயத்தில் ஏதோ ஒரு குறை இருக்கிறது என்று தானே அர்த்தம் என்கிறார் ஒருவர்.
சிரிப்புத்தான் வருகிறது.
கரைப்பவர் கரைத்தால் கல்லும் கரையும் என்று பழமொழியே இருக்கிறது.
ஒற்றுமையாய் வாழும் ஓர் ஏழைக் கணவன், மனைவியர்க்கிடையில்,
வசதிமிக்க ஒருவன் புகுந்து தன் செல்வத்தையும் வசதிகளையும் காட்டி ஈர்க்க,
அப்பெண் மனம் மாறினாள் என்றால்,
அது அவள் கணவனின் குறையாகுமா? அல்லது,
கணவனுக்கு விசுவாசமாய் இருந்த அப்பெண்ணின் மனதை,
செல்வத்தையும் வசதிகளையும் காட்டி ஈர்த்தவனின் குறையாகுமா?
இதுதான் என் கேள்வி.

*****

ஒற்றுமையாய் இருந்த ஒரு குடும்பத்தைத் தன் வசதிகளைக் காட்டிப் பிரிப்பது,
எவ்வளவு பெரிய குற்றமோ அதே அளவான குற்றமாய்த்தான்,
ஒரு மதத்தைப் பின்பற்றுபவரை, வசதிகளைக் காட்டி ஈர்ப்பதுவும் என்று கருதுகிறேன்.
நான் மட்டுமல்லன், நடுநிலையுள்ள அனைவரும் அப்படித்தான் கருதுவார்கள்.
ஒருவிசுவாசியைமனமயக்கம்செய்வதைஇயேசுபிரான்தானும்ஏற்றுக்கொள்வாரா?
ஆரம்பத்தில் தீய அப்பிள் பழத்தைக் காட்டி,
ஆதாம் ஏவாளை ஈர்த்த சாத்தானின் செயலுக்கு ஒப்பானதன்றோ இச்செயல்!
இது புரியாமல், தம் செயல் சரிதான் என தர்க்கம் செய்ய முற்படும்,
சாத்தான்களை நான் என் செய்ய?

*****

இனி, விடயத்தைத் தொடர்கிறேன்.
நம் இந்துமதத்தாரும் இந்நாட்டின் மேற்கிலும் தெற்கிலும் ஆலயங்கள் அமைத்துச் செயற்பட்டாலும்,
அங்கும் அம்மதத்தைப் பின்பற்றுவோர் தமிழ்மொழி பேசுபவராக மட்டுமே இருக்கின்றனர்.
சிங்களவர்கள் இந்து ஆலயங்களுக்கு வந்து வழிபட்டபோதும்,
அவர்கள் தம்மை சிங்கள,பௌத்தர்களாகவே இனங்காட்டி நிற்கின்றனர்.
இந்துமதத்தோடு அவர்கள் ஒருகாலும் தம்மைக் கரைத்துக் கொள்வதில்லை.
தமது ஆலயத்தைத் தேடி வரும் சிங்கள பௌத்தர்களை,
இந்து மதத்தவர்களாக மாற்ற நமது இந்துமதம் என்றும் எங்கும் முயற்சிப்பதில்லை.
இதுதான் நமது இந்துமதத்தின் கண்ணியப்பெருமை.
நமது நாட்டின் மதங்களைப் பொறுத்தவரை,
இந்துமதம் ஒன்றே தமிழ்மொழியை மட்டும்,
தனித்து தம் தாய்மொழியாய் உட்கொண்டு நிற்கிறது.
அதுபோலவே எம் மதத்தவரையும் தம் மதத்திற்குள் ஈர்க்கவும் அது முயற்சிப்பதில்லை.
இது மற்றைய மதங்களுடனான ஒப்பீட்டில் இந்துமதத்தின் தனித்துவமாம்.

*****

இலங்கையின் வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரை,
பெரும்பான்மை மக்களால் பின்பற்றப்படும் மதம் என்ற பலம்,
நம் இந்துமதத்திற்கே உரியது.
இதுவும் இங்குள்ள இந்துமதத்தின் தனித்துவங்களில் ஒன்றாகிறது.
வடக்கிலும் கிழக்கிலும் மதங்களைப் பின்பற்றுவோர் வரிசையில்,
இலங்கையில் இந்துமதத்திற்கு மிகப் பிற்பட்டநிலையிலேயே,
கிறிஸ்தவ மதமும் இஸ்லாமியமதமும் இருக்கின்றன.
மேற்குறிப்பிட்ட இரண்டு மதங்களும்,
உலக அளவில் பெரும்பான்மை பெற்றிருந்தாலும்,
இலங்கையின் வடக்கு, கிழக்கு ஆகிய பகுதிகளைப் பொறுத்தவரை இந்துமதமும்,
மொத்த நாட்டைப் பொறுத்தவரை பௌத்தமதமுமே,
பெரும்பான்மை மதங்களாய்த் திகழ்கின்றன என்பதுவே நிதர்சனம்.

*****

தமது பெரும்பான்மையை வைத்து இந்நாட்டில் தம் மதத்திற்கே முதன்மை உரிமை என,
போராடி நிற்கும் சிங்கள பௌத்தர்களைப் போல,
வடக்கிலும் கிழக்கிலும் தமக்கு இருக்கும் பெரும்பான்மையை வைத்து,
இங்கு எம் மதத்திற்கே முதல் உரிமை தரப்படவேண்டுமென,
இந்துமதத்தவர் ஒருக்காலும் போராடியதில்லை.
இந்துமதத்தின் பெருமைக்கான சான்றுகளில் இதுவும் ஒன்று.

*****

அதுமட்டுமன்றி கிறிஸ்தவம், இஸ்லாம் எனும் இவ்விரண்டு மதத்தாரினதும்,
உலகளாவிய தொடர்பு பற்றிய ஓர் உண்மையையும்,
நாம் இவ்விடத்தில் காணல்வேண்டும்.
கிறிஸ்தவ மதமும், இஸ்லாமிய மதமும் உலகளாவி நிர்வாகப்படுத்தப்பட்டு,
இயங்கிவரும் மதங்களாய்த் திகழ்கின்றன.
மேற்கு நாடுகளின் பலத்தோடு, கிறிஸ்தவர்களின் தலைமைப்பீடமாய்,
உலக அளவில் இயங்கிவரும் ரோம் என்ற நாடு,
போப் ஆண்டவரின் தலைமையில் ஓர் அரசாகவே இயங்கிவருகிறது.
இது இம் மதத்தார்க்கு உலகப்பலத்தை ஏற்படுத்தி வருவது வெளிப்படையான உண்மை.
அதுபோலவே இஸ்லாமிய மதத்தாரின் ஆட்சியில் இயங்கிவரும்,
மத்திய கிழக்கு நாடுகளின் பெற்றோலிய வளமும்,
அவ்வளத்தால் அவர்கள் அடைந்திருக்கும் பணபலமும்,
உலகம் பூராவும் உள்ள இஸ்லாமிய மதத்தார்க்கு,
பெரும்பலத்தை ஏற்படுத்தி வருவது நிதர்சனம்.

*****

இந்த விடயத்தில் இந்துமதம் உலகளாவிய பலத்தில்,
மற்றைய மதங்களுக்கு மிகவும் பிற்பட்டே நிற்கிறது.
இந்துமதத்தின் பிறப்பிடமாய்க் கருதப்படும் பாரததேசம்,
இந்துமதத்தாரைப் பெரும்பான்மையாய்க் கொண்ட மாபெரும் தேசமாய்த் திகழ்ந்தபோதும்,
கடந்த காலங்களில் அது மதச்சார்பின்மைக் கொள்கையை உறுதியாய்ப் பேணியதால்,
இந்து மதத்தைப் பலம் செய்யும் ஒருதேசமாய் அதுவும் திகழவில்லை.
இந்து மதத்தாரும் உலகளாவி ஆங்காங்கு தமது ஆலயங்களை அமைத்து வந்தாலும்,
மேற்படி மதங்களுக்கு இருப்பது போன்ற உலக பலமோ, நிர்வாக பலமோ, பண பலமோ,
நம் இந்துமதத்திற்கு இல்லை என்பது வெளிப்படை.

*****

இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்று நினைப்பீர்கள்.
இன்னும் சில விடயங்களைச் சொல்லிவிட்டு அதுபற்றிச் சொல்லத் தொடங்குகிறேன்.
பொதுவாக உலகளாவிய ஓர் உண்மை இருக்கிறது.
ஓர் இடத்தில் வாழும் இரண்டு மக்கட் பிரிவினருள்,
பெரும்பான்மை மக்கள் பலமுள்ள இனம்,
அவ்விடத்தில் தலைமை தாங்குவதும்,
சிறுபான்மை இனம் அங்கு இரண்டாம் நிலை வகிப்பதும்,
உலகெங்கும் காணப்படும் பொது உண்மைகளாம்.

*****

அதுமட்டுமன்றி,
பெரும்பான்மை மக்கள் பலம் பெற்ற இனம் அப்பலத்தைக் கொண்டு,
அதிகாரங்களைப் பலவந்தமாகத் தமக்குரியதாக்குவதும்,
தம்மோடு இணைந்து வாழும் சிறுபான்மையினரை அடக்கி ஆள்வதும் கூட,
உலகெங்கும் நிகழும் உண்மைகளாகும்.
மேற்சொன்னவைகள் நிஜத்தை உணர்த்தும் தரவுகள்,
இனி நான் சொல்லவந்த விடயத்திற்கு வருகிறேன்.

*****

பலம் பெற்ற மக்கள் தொகுதி, பலம் குன்றிய மக்கள் தொகுதியை,
அடக்கியாள்வது இயல்பு என்று சொன்னேனல்லவா?
நமது தமிழர் பாரம்பரியப் பிரதேசமான வடக்கிலும் கிழக்கிலும்,
அண்மைக்காலமாக இது மாறி நடந்து வருகின்றது.
உலக விதிக்கு மாறான விதிவிலக்குச் சம்பவங்கள் சில,
அதிசயமாய் இங்கு நடந்து வருகின்றன.
அதுபற்றித்தான் இக்கட்டுரையில் எழுத நினைக்கிறேன்.

*****

(13 பக்கம் பார்க்க...)

# தமிழரின் மனங்களை வெல்ல தனியொரு அமைச்சு அவசியம்

## அரசை வலியுறுத்துகிறார் விஜயதாஸ



கொழும்பு, டிசெ. 17

தமிழ் மக்களின் மனங்களை வெற்றிகொள்ள தனி அமைச்சு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள விசேட செவ்வி ஒன்றிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் பேசும் மக்களின் மனங்களை நாங்கள் வெல்ல வேண்டியுள்ளது.

அதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சு நடத்துவதில் அர்த்தமில்லை. காரணம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், புலம்பெயர் தமிழ் மக்களும் ஒருபோதும் தமிழ் மக்களின் நலனுக்காகச் செயல்படவில்லை.

மாறாக அவர்கள் தங்களின் நலனுக்காகவே கடந்த காலங்களில் செயற்பட்டார்கள். நாம் நேரடியாகத் தமிழ் மக்களுடன் ஈடுபாட்டுடன் செயற்படுவதற்கான ஒரு வழியை புதிய அரசு ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

தற்போது ஜனாதிபதி கோட்டாபய தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள அரசு மக்களின் மனதை வெல்லும் வகையில் செயல்பட்டு வருகின்றது. எனவே தமிழ் மக்களின் மனங்களை வெல்லும் வகையில் அரசு ஏதாவது சில திட்டங்களை முன்னெடுக்கவேண்டிய தேவை உள்ளது.

அதாவது தமிழ் மக்களின் பிரச்சினைகள் என்ன, அவர்களின் உணர்வுகள் என்ன, தமிழ்மக்களின் அபிமானத்தைப் காப்பாற்றுவது எப்படி போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய விசேட திட்டமொன்றை ஜனாதிபதி தலைமையிலான அரசு முன்னெடுப்பது அவசியமாகிறது.

விசேடமாக இதற்காக தனியானதொரு அமைச்சை உருவாக்க வேண்டும். அதனூடாகவே இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுவது அவசியமாகிறது.

வடக்கையும் தெற்கையும் இணைக்க வேண்டும். தமிழ் மக்களும், சிங்கள மக்களும் முன்னர் ஒன்றிணைந்து ஈடுபாட்டுடன் செயற்பட்டனர். எனினும் 1978ஆம் ஆண்டின் பின்னரே நிலைமை மாற்றமடைந்தது.

இரண்டு சமூகங்களும் இணைந்து புரிந்துணர்வுடன் பணியாற்றும் சூழல் உருவாக்கப்படவேண்டும். அது கடினமானது அல்ல. அது ஒரு சாத்தியமான விடயம்.

தமிழ் மக்களுடன் நேரடியாக அரசு அக்கறையுடன் செயற்பட வேண்டும். அதற்காகவே இந்த விடயத்துக்கு தனியானதொரு அமைச்சை உருவாக்குவது சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன்.

தன்னுடன் தமிழ்பேசும் மக்களை அரவணைத்துச் செல்ல வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கருதுகிறார். அதற்கு அவருக்கு இவ்வாறான ஒரு திட்டம் தேவைப்படுகிறது.

அதனை முன்னின்று கொண்டு செல்ல நான் தயாராக இருக்கின்றேன். அந்தப் பொறுப்பை என்னிடம் தந்தால் நான் அதைச் சிறப்பாக வழிநடத்தி செய்து முடிப்பேன். வடக்கையும் தெற்கையும் இணைப்பேன்.

இவ்வாறான ஒரு விசேட வேலைத் திட்டத்தை முன்னெடுத்தால் ஒரு வருட காலத்தில் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணலாம். முதலில் மக்களின் மனதை வெல்ல வேண்டும்.

தமிழ் மக்களுடன் ஈடுபாட்டுடன் பணியாற்றுவதன் மூலமே இதனைச் செய்ய முடியும். தமிழ் மக்களின் அபிமானத்தை நாம் ஏற்க வேண்டும். அதற்கான திட்டம் முன்னெடுக்கப்படுவது அவசியம்.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிந்ததும் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடக்கு – கிழக்குப் பகுதிகளில் பெரும் அபிவிருத்திகளை செய்தார். அப்போதைய சூழலில் அது சரியாக இருந்தது.

எனினும், தமிழ் மக்கள் திருப்தி அடையவில்லை. எனவே நாம் அந்த மக்களின் அபிமானம் குறித்து பேசவேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து இவ்வாறு பயணித்தால் முஸ்லிம் மக்களும் எம்முடன் இணைவார்கள்.

தமிழ் பேசும் மக்களின் மனங்களை வெல்வதற்கு ஜனாதிபதிக்கு இன்னும் அவகாசம் உள்ளது – என்றார்.

## தூதரகப் பணியாளர் கடத்தல்;

# ராஜித சேனாரத்னவிடம் மிகவிரைவில் விசாரணை

கொழும்பு, டிசெ. 17

கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரக அதிகாரி கடத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்டார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம், குற்ற விசாரணைத் திணைக்களம் விசாரணை நடத்தவுள்ளது.

பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளன.

கடத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்டார் எனக் கூறப்படும் சுவிஸ் தூதரக அதிகாரியிடம் நடத்தப்படும் விசாரணைகளின் பின்னர், முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம், விசாரணை நடத்தப்படவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பெரும்பாலும், இந்த வார இறுதியில் ராஜித சேனாரத்ன விசாரணைக்காக அழைக்கப்படுவார் என்றும் தகவல்கள் கூறுகின்றன.

இந்தக் கடத்தல் குற்றச்சாட்டு புனையப்பட்ட ஒரு கதை என்ற முடிவுக்கு வந்துள்ள குற்ற விசாரணைப் பிரிவினர், இந்த விவகாரத்துக்கும் ராஜித சேனாரத்னவுக்கும் தொடர்பு உள்ளதா எனக் கண்டறியவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடத்தப்பட்ட சுவிஸ் தூதரகப் பணியாளரின் வாய்க்குள், கைத்துப்பாக்கி வைத்து அச்சுறுத்தப்பட்டார் என முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன குற்றம் சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பொதுத் தேர்தலில் வெற்றியடைய சஜித் கட்சித் தலைமையைக் கேட்பது தவறு!

## சுட்டிக்காட்டுகிறார் ஆசு மாரசிங்க

கொழும்பு, டிசெ. 17

பொதுத் தேர்தலில் வெற்றியடைவதற்குத் தலைமைத்துவம் அவசியமென சஜித் எதிர்பார்ப்பது தவறென நாடாளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீகொத்தாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தலைமைத்துவப் பதவிக்காக, கட்சிக்குள் பூசல்களைத் தோற்றுவித்து கட்சியைப் பலவீனப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாமென சஜித் பிரேமதாஸ தரப்பினரிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வெற்றி இலக்கை அடைவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.



அத்துடன் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கட்சித் தலைமை சஜித் பிரேமதாஸவுக்குப் பெற்றுக்கொடுத்திருக்கும் நிலையில் நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் வேட்பாளராக சஜித்தையே களமிறக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

கட்சித் தலைமைத்துவம் தொடர்பாக கட்சி உயர் மட்டம் உரிய காலத்தில் தீர்மானம் எடுக்கும். அதுவரை அனைவரும் பொறுமையுடன் செயற்பட வேண்டும் – என்றார். (ஐ)



# இந்தியாவை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தியது மேற்கிந்திய தீவுகள் அணி!

இந்திய மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 8 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 287 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இந்திய அணி சார்பாக ரிஷப் பந்த் 71 ஓட்டங்களையும், ஸ்ரேயஸ் ஐயர் 70 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் கோட்ரெல், போல் மற்றும் ஜோசப் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்கள் வீதம் வீழ்த்தினர்.

பதிலுக்கு 288 என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 47.5 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ஹொப் 102 ஓட்டங்களையும் ஹெட்மையர் 139 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்து மேற்கிந்திய தீவுகள் அணியின் வெற்றியை உறுதி செய்தனர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக ஷிம்ரோன் ஹெட்மையர் தெரிவு செய்யப்பட்டார்.





## மழையின் தாண்டவத்தால் வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது டெஸ்ட்

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலையில் நிறைவடைந்துள்ளது.

மழை காரணமாக குறித்த போட்டி பெரிதும் பாதிக்கப்பட்டதோடு முதலாவது நாள் மற்றும் 5வது நாள் ஆட்டம் மட்டுமே ஆட்டம் முழுமையாக இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று தமது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 308 ஓட்டங்களைப் பெற்ற வேளையில் ஆட்டத்தை இடை நிறுத்திக் கொண்டது.

இலங்கை அணி சார்பாக தனஞ்சய டி சில்வா 102 ஓட்டங்களையும் திமுத் கருணாரத்ன 59 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யீன் ா அப்ரிடி மற்றும் நசீம் ஷா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்கள் வீதம் வீழ்த்தினர்.

இந்நிலையில், தமது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி நேற்று முன் தினம் ஐந்தாம் நாள் ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பாகிஸ்தான் அணியின் அபிட் அலி தமது கன்னி டெஸ்ட் போட்டியிலேயே ஆட்டமிழக்காமல் சதமடித்ததோடு, பாபர் அசாம் ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்திருந்தனர்.



## பாகிஸ்தான் மக்களின் இதயங்களை வென்றார் இலங்கை வீரர் தனஞ்ஜய

ராவல்பிண்டியில் நடந்து முடிந்த டெஸ்ட் போட்டியின் வெற்றியாளர் யார் என்பது குறித்து இலங்கை வீரர் தனஞ்ஜய டி சில்வா அளித்த பதில், பாகிஸ்தான் ரசிகர்களைக் கவர்ந்துள்ளது.

பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்பின் ஒரு பகுதியாக இரண்டு போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடத் திட்டமிட்டுள்ளது.

அதன்படி இரு அணிகளுக்கும் இடையேயான முதல் டெஸ்ட் ராவல்பிண்டியில் கடந்த டிசம்பர் 11ஆம் திகதி தொடங்கியது. மழையால் கடுமையாக பாதிக்கப்பட்ட போட்டி இறுதியில் சமநிலையில் முடிவடைந்தது.

இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட் இழப்பிற்கு 308 ஓட்டங்கள் எடுத்து டிக்ளர் செய்தது. தனஞ்ஜய டி சில்வா ஆட்டமிழக்காமல் சதம் அடித்தார்.




5ஆவது நாள் தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய பாகிஸ்தான் அணி, ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட் இழப்பிற்கு 252 ஓட்டங்கள் எடுத்தது. அபித் அலி மற்றும் பாபர் அசாம் ஆகியோர் இறுதிவரை ஆட்டமிழக்காமல் சதம் விளாசினார்.

இலங்கைக்கு எதிரான டெஸ்டில் 109 ஓட்டங்கள் குவித்த பாகிஸ்தான் புதுமுக வீரர் அபித் அலி, ஒரு நாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் அறிமுக ஆட்டத்திலேயே சதம் விளாசிய முதல் வீரர் என்ற சாதனையை படைத்தார்.

போட்டிக்கு பின் சதமடித்த இலங்கை வீரர் தனஞ்ஜய டி சில்வா ஊடகவியாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டார். அப்போது, இந்த டெஸ்ட் போட்டியில் மழை, கிரிக்கெட் அல்லது பொதுமக்கள் ஆகியோரில் வென்றவர் யார்? என நிருபர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த டி சில்வா, பாகிஸ்தான் அணிதான் வெற்றியாளர் என நேர்மையாகப் பதிலளித்தார்.

சில்வாவின் பதில் பாகிஸ்தானியர்களின் இதயங்களை வென்ற நிலையில், பலர் அதை பகிர்ந்து வருவதால் சமூக வலைதளங்களில் வீடியோ வைரலாகியுள்ளது.




## சலாவின் இரட்டைக் கோலின் உதவியுடன் லிவர்பூல் வெற்றி!

இங்கிலாந்து பிரீமியர் லீக்கில் லிவர்பூல் அணி மொஹமட் சலாவின் இரட்டைக் கோல் மூலம் வட்போர்ட் அணிக்கு எதிரான போட்டியில் வெற்றி பெற்றுள்ளது.

ஆன்பீல்டில் நேற்று முன்தினம் இந்தப் போட்டி நடைபெற்றுள்ளது.

இந்த வெற்றியுடன் லிவர்பூல் இரண்டாவது இடத்தில் இருக்கும் லெய்சஸ்டர் சிட்டியை விடவும் 11 புள்ளிகள் இடைவெளியுடன் முதலிடத்தில் உள்ளது.

மறுபுறம் வட்போர்ட் வெறுமனே 9 புள்ளிகளுடன் புள்ளிப்பட்டியலில் கடைசி இடத்தில் நீடிக்கிறது.

## குடிபோதையில் தந்தையும் மகனையும் தாக்கினாரா இந்தியக் கிரிக்கெட் வீரர்?

குடிபோதையில் இந்திய கிரிக்கெட் அணி வீரர் பிரவீன்குமார் தாக்கினார் என நபர் ஒருவர் குற்றஞ்சாட்டிய நிலையில் அதை அவர் மறுத்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் பிரவீன்குமார் தொடர்பில் உத்தர பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த தீபக் சர்மா என்பவர் கூறுகையில், பஸ் நிலையத்தில் நின்றிருந்த என்னையும், என் மகனையும் பிரவீன்குமார் குடிபோதையில் அடித்தார், அதில் என் கை உடைந்துவிட்டது.

என் மகனுக்கும் காயம் ஏற்பட்டது. இது குறித்து பொலிஸில் முறைப்பாடு அளித்தும் அவர்கள் அதை ஏற்கவில்லை எனக் கூறியிருந்தார்.

இது தொடர்பில் மௌனம் காத்து வந்து பிரவீன்குமார் ஊடகம் ஒன்றிடம் பேசியுள்ளார்.

அவர் கூறுகையில்,

நான் சர்வதேச கிரிக்கெட்டராக இருந்தவன். எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர்.

என் வாழ்க்கையில் நான் எறும்பைக் கூடக் கொன்றதில்லை. நான் எப்படி சிறுவனை அடித்திருப்பேன்? நான் என் காரிலிருந்து கீழே இறங்கிய போது தீபக் சர்மா தான் என்னைத் தாக்கினார் எனக் கூறியுள்ளார்.

இது குறித்து பொலிஸார் கூறுகையில், இருவரும் இது குறித்து முறைப்பாடு அளித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி வருகிறோம் என கூறியுள்ளனர்.



# கூட்டணியுடன் ஒன்றிணைய வாருங்கள்

## அழைக்கிறார் ஆனந்தசங்கரி

யாழ்ப்பாணம், டிசெ. 17

மாட்டைத் திருடியவன் கோழியைத் திருடியவன் மீது குற்றம்சாட்டி நீதியைப் பெறமுயற்சிக்கும் செயற்பாடுகளை தமிழ் அரசியல் கட்சிகள் கைவிட்டு, தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து செயற்பட வேண்டும் என மூத்த அரசியல்வாதி வீ.ஆனந்தசங்கரி கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்று அணி யார் தலைமையில் என தலைப்பிட்டு, ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: –

2004ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியை கூட்டுச் சதி மூலம் வெளியேற்றி விட்டு 28 வருடங்கள் இயங்காமலிருந்த தமிழரசுக் கட்சியை விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்புடன் இணைத்து புதிதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினார்கள்.

விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்டது என்று நம்பிய காரணத்திற்காக தமிழ் மக்களும் ஆதரித்தார்கள்.

2004ஆம் ஆண்டு தேர்தலில் எவரையும் வாக்களிக்க விடாது தடுத்து அனைத்து தேர்தல் ஜனநாயக விழுமியங்களையெல்லாம் மீறி புலிகளின் முழு ஆதரவுடன் வெற்றி பெற்றார்கள்.

அதன் காரணமாகவே புலிகளால் உருவாக்கப்பட்ட கட்சி என்று எண்ணிய காரணத்தினால் தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் முடிவடைந்த பின்பும் ஆதரவு அளித்தார்கள்.

இன்று உடம்பில் குண்டுச் சிதறல்களுடன் நாளாந்த சாப்பாட்டுக்கே கஷ்டப்படும் முன்னாள் போராளிகள் ஒவ்வொருவரும் 2004 ஆம் ஆண்டுத் தேர்தலில் குறைந்தது 25 வாக்குகளுக்கு மேல் ஒரே வாக்களிப்பு நிலையத்தில் தங்களின் பலத்தைப் பிரயோகித்து அவர்களுக்கு வாக்களித்தார்.

அல்லது வாக்களிப்பதற்கு உதவினார்கள்.

பதவிக்கு வந்துவிட்டு இன்று அவர்கள் படும் கஷ்டங்களை வெறுமனே வேடிக்கை பார்த்துக்கொண்டு, இன்று வானுயர்ந்த வீடுகள், காணிக்கு மேல் காணிகள் வாங்கிக் கட்டடங்களைக் கட்டிக்கொண்டு இருக்கின்றார்கள்.



எனவே ஏமாந்ததுபோதும், யுத்தம் நடத்திய தரப்பு இப்போது பதவிக்கு வந்துள்ளது.

அந்தக் காலகட்டங்களில் நடுநிலையாக நின்று ஜனநாயக ரீதியில் விடுதலைப் புலிகளுக்கும், முன்னைய ஜனாதிபதிக்கும் பல கடிதங்கள் மூலம் வேண்டுகோள் விடுத்த ஒரே கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணிமட்டும்தான்.

அதனால்தான் அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் சுதந்திர தின வைபவம் ஒன்றில் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால் குறைந்தபட்சம் ஆனந்தசங்கரி போன்றவர்கள் கேட்பதையாவது, சிங்கள மக்கள் கொடுக்கவேண்டும் என்று கூறினார்.

பெரும்பான்மை மக்கள் அனுமதிக்கும் தீர்வைத்தான் வழங்க முடியும் என்று பிரதமர் தற்போது கூறியுள்ளார்.

பெரும்பான்மை மக்களினது நன்மதிப்பைப் பெற்ற ஒரே தமிழ்த் தலைமை என்ற நிலையில் எம்மால் காலத்திற்குக் காலம் நடுநிலையுடன் தெரிவித்த கருத்துக்களை இன்றும் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த மதகுருமார்கள், புத்திஜீவிகள் மற்றும் சாதாரண மக்களும் ஏற்றுக் கொள்கின்றார்கள்.

எனவே பெரும்பான்மைச் சமூகத்துடன் பேசக்கூடியவல்லமையுள்ள ஜனநாயக அமைப்பு நாம் மட்டும்தான்.

ஏனையவர்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் பக்கம் சார்ந்து செயற்பட்டவர்கள்.

அவர்களால் நியாயமான கருத்தை முன்வைத்து பேரம் பேசமுடியாது.

இது மாட்டைத் திருடியவன் கோழியைத் திருடியவன் மீது குற்றம்சாட்டி நீதியைப் பெறமுயற்சிப்பது போலாகும்.

எனவே வாருங்கள் அனைவரும் கூட்டணியில் இணைந்து செயற்பட்டு யுத்தம் நடத்திய தரப்பிடம் எமது கோரிக்கைகளை முன்வைத்து எமது மக்களின் பிரச்சனைகளுக்கு ஒரு தீர்வைக் காண்போம் – என்றுள்ளது. (ஐ)

## பாவிகளை...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த சில மதத்தலைவர்களும்,
அம்மதத்தைப் பின்பற்றுவோர் சிலரும்,
நம் பிரதேசத்தில் சிறுபான்மையினராக இருந்துகொண்டு,
பெரும்பான்மை பலம் பெற்ற இந்து மதத்தவர்களை,
வெளிப்படையாக வெறுக்கவும் விமர்சிக்கவும் செய்வதோடு,
அம்மதத்தாரை அடக்கியாளவும் முயன்று வருகின்றனர்.
தமது உலகளாவிய பலம்கொண்டு இப்பிரதேசங்களில்,
பகிரங்கமாக இந்து மத்தவர்களை மதமாற்றம் செய்யும்,
இவர்களது செயற்பாடுகள் அருவருக்கத்தக்கன.
இது தவறு என்று யாரும் விரல் நீட்டினால்,
தம் மதத்திற்குள் இருக்கும் பிரிவுகளை எடுத்துக் காட்டி,
நான் இல்லை அவர்தான், அவரில்லை இவர்தான் என்று,
இவர்கள் செய்யும் விளையாட்டு வேடிக்கையானது.
இவர்களுள் எத்தனை பிரிவுகள் இருந்தாலும் அத்தனை பிரிவுகளும்,
மதமாற்ற முயற்சியைப் பகிரங்கமாகச் செய்வது வெளிப்படை.
அதுபற்றிய ஒரு வேடிக்கையான விடயத்தை அடுத்தவாரம் சொல்கிறேன்.

*****

(மிகுதி அடுத்தவாரத்தில்)




# அரசு இரட்டை வேடம்!

## மிலேனியம் சவால் ஒப்பந்தம் குறித்து ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 17

அமெரிக்காவின் மிலேனியம் சவால் ஒப்பந்தத்தில், அரசு இரட்டை நிலைப்பாட்டைக் கடைப்பிடிப்பதாக ஜே.வி.பி. குற்றம் சாட்டியுள்ளது.

கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

தேர்தல் காலத்தில் மிலேனியம் சவால் ஒப்பந்தம் தொடர்பாகப் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தவர்கள் இப்போது ஒப்பந்தத்தைப் பாராட்டுகிறார்கள் எனவும் அவர் கூறினார்.

மிலேனியம் சவால் ஒப்பந்தம் தேசிய பாதுகாப்பைப் பாதிக்கிறது என்று கூறி அதனை நிராகரிப்பதாக மஹிந்த தரப்பு தேர்தல் காலத்தில் உறுதியளித்தது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

இத்தகைய ஒப்பந்தங்களின் நோக்கம் ஆசிய பிராந்தியத்தில் அவர்களின் பாதுகாப்பை வலுப்படுத்துவதும் பொருளாதாரம் உள்ளிட்ட முக்கிய விடயங்களைக் கையாள்வதுமே.

அந்தவகையில் மிலேனியம் சவால் ஒப்பந்தத்தின் மூலம் இலங்கைக்கு நிதியை வழங்கி இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதே அமெரிக்காவின் நிலைப்பாடு.

எனவே இத்தகைய திட்டங்கள் அடிப்படையிலேயே நிராகரிக்கப்பட வேண்டும் – என்றார். (ஐ)

## மீண்டும் இயங்கவுள்ளது மத்தள விமான நிலையம்

கொழும்பு, டிசெ. 17

மத்தள விமான நிலையத்தை இயங்க வைப்பதில் உள்ள பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் செயல் திட்டங்களை வழங்குமாறு தொழில்துறை ஏற்றுமதி, முதலீட்டு ஊக்குவிப்பு, சுற்றுலா மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அமைச்சு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

சுற்றுலா மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சு மற்றும் பிற அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் இந்த அறிவுறுத்தலை வழங்கினார்.

இதன்போது, மத்தள விமான நிலையத்தில் 2018ஆம் ஆண்டில் 709 விமான நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் 334 சர்வதேச விமானங்கள் மற்றும் 375 உள்நாட்டு விமானங்கள். இது 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 50 வீதம் குறைவானது.

2018 ஆம் ஆண்டில் மொத்தம் 3403 பயணிகள் மத்தள சர்வதேச விமான நிலையத்துக்கு வந்தனர். இது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 85 வீதம் குறைவானது. மத்தள விமான நிலையம் மூடப்பட்டதால் 2017 ஆம் ஆண்டில் கட்டுநாயக்க நிலையத்தில் விமான சேவை அதிக அளவில் இருந்தது.

இருப்பினும், 2019 முதல் எட்டு மாதங்களில் மத்தள சர்வதேச விமான நிலையத்துக்கு 645 விமானங்களும் வந்துள்ளன. 1297 பயணிகள் வந்துள்ளனர். இந்த மாதங்களில் எந்தச் சரக்கு விமானங்களும் மத்தள விமான நிலையத்துக்கு வரவில்லை. (ஐ)

## மணல் கொள்ளையில் ஈடுபட்ட 5 பேர் அரியாலையில் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 17

அரியாலை பூம்புகார் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஐவர் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரியாலை பூம்புகார் பகுதியில் உள்ள கடற்கரை ஓரமாக பைக்கோ வாகனத்தின் மூலம் மணல் அகழ்வில் ஈடுபட்டபோது 5 பேரும் கைது செய்யப்பட்டனர் .

இவர்களைக் கைது செய்து விசாரணை செய்தபோது சுரங்க அகழ்வுப் பணியகத்தின் அனுமதியின்றி அந்தப் பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்டமை கண்டறியப்பட்டது .

அத்துடன் கைது செய்யப்பட்ட நபர்களிடமிருந்து ஒரு டிப்பர் வாகனம், 3 உழவு இயந்திரங்கள் என்பன கைப்பற்றப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபர்கள் மேலதிக விசாரணைக்காக யாழ்ப்பணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ஐ- 07)

## கோதுமை மாவின் வரி 8 ரூபாவினால் குறைப்பு

கொழும்பு, டிசெ. 17

கோதுமை மா ஒரு கிலோ கிராமின் இறக்குமதி வரி 8 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.



இந்த வரிக் குறைப்பு கடந்த 14ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வந்துள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கோதுமை மாவின் இறக்குமதி வரி 36 ரூபாவாகக் காணப்பட்டது. அந்த வரி முழுமையாக நீக்கப்பட்டு 8 ரூபா புதிய வரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்று நிதி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

கோதுமை மாவின் விலையைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க இந்தப் புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சம்பிக்க ரணவக்க விவகாரத்தில் அறிக்கை கோருகிறது நீதிமன்றம்

கொழும்பு, டிசெ. 17

ராஜகிரிய விபத்து தொடர்பான விசாரணைகளை நடத்தி நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்க கொழும்பு குற்றவியல் பிரிவுக்குக் கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக, 2016 இல் ஏற்பட்ட ராஜகிரிய விபத்துடன் சம்பந்தப்பட்ட முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் அவரது சாரதி ஆகியோர் வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றம் தடை விதித்தது.

இருப்பினும், நேற்று மேலதிக நீதிவான் நிரஞ்சனா டி சில்வா, ரணவக்க மற்றும் சாரதி ஆகியோர் நீதிமன்றத்தின் முன்அனுமதியுடன் வெளிநாடு செல்ல முடியும் என அறிவித்தார். (ஐ)

# வடக்கு குடிதண்ணீர்த் திட்டத்துக்கு ஜப்பானிடம் உதவி கோரும் டக்ளஸ்

கொழும்பு, டிசெ. 17

வடக்கு மாகாணத்தில் குடிதண்ணீரை நன்னீராக்கும் திட்டத்துக்கு ஜப்பானிய அரசின் உதவியைக் கடற்றொழில் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரியுள்ளார்.

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் டொமிற்சு மோட்டேஜிக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

இதன்போது, வடக்கில் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்ற குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வை காணும் நோக்கில் அமைச்சரால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.



மேலும், கடற்றொழிலை இலங்கையில் மேலும் வளப்படுத்துவதற்கு தேவையான அனைத்து வகையான பங்களிப்புக்களையும் ஜப்பான் அரசு வழங்கவேண்டும் என்றும் அமைச்சர் இந்தச் சந்திப்பில் கேட்டுக் கொண்டார்.

அத்தோடு, கடற்றொழில் ஈடுபடுவோர் அனர்த்தங்களை எதிர்கொள்கின்றபோது, அவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கும் பாதுகாப்பாக மீட்பதற்கும் தேவையான நவீன பொறிமுறையை உருவாக்குவதற்கு தொழில்நுட்ப மற்றும் படகு வசதிகளை ஜப்பான் வழங்க வேண்டும் அவர் கோரினார்.

வடக்கின் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பான கோரிக்கையைக் கவனத்தில் எடுத்துக் கொள்வதாகத் தெரிவித்த ஜப்பான் வெளிவிவகார அமைச்சர், அனர்த்தங்களின்போது நடைமுறைப்படுத்தப்படவேண்டிய பொறிமுறை தொடர்பாக ஏற்கனவே ஆராயப்பட்டு வருவதாகவும் கூறினார். (ஐ)

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
WesternUnion WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தினை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உலகெங்குமிருந்து உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை
No.303, K.K.S. Road, Jaffna. Srilanka.Tel: 021 222 2670/5392 Fax: 021 222 3214
Email: srimurugan09@gmail.com srimurugan303@gmail.com